
தூய தமிழ் வளர்ச்சி
தென்மொழி
மக்கட்பண் பில்லார்
மரம் போல்வர்!
உரம்பெய்த வல்லறிவால்
ஊர்க்குநலம் செய்யார்,
தரங்குறைந்த உள்ளத்தால்
தந்நலமே கொள்வார்!
அரம்போலும் கூர்மையரே
ஆனாலும் அன்னார்
மரம்போல்வர் ஆவாரே;
மக்கட்பண் பில்லார்!
சுவடி : 19
ஓலை : 5
விலை
உருபா 1-25
சாதி, மத வேறுபாடுகளற்ற...

நமக்கு வந்த மடல்கள்.

0: 959 : பேரன்புக்குரிய ஐயா, திருச்சியில் கல்லூரி ஒன்றில் துணைப் பேராசிரியராக (விலங்கியல்) பணிபுரிகிறேன். 1965-ஆம் ஆண்டு அண்ணு அழைப்பேற்று இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவன் என்றும். தந்தை பெரியாரின் கொள்கை வழி, கலப்பு மணம் புரிந்தவன் என்றுமே என்னைப் பற்றிக் கூற விருப்புகிறேன். ஒரு நூல்நிலையத்தில் தற்செயலாக **'தென்மொழி'** இதழ் பார்த்தேன். தங்களின் உரைகளை விடுதலையில் படித்தேனையன்றி வேறு தங்களின் முயற்சிகளை இதுவரை அறிந்திலன். தென்மொழி இதழ் (சன-பிப்ரவரி-1982) படித்து இருப்பூதெய்தி மகிழ்ச்சிக் கடலல் திளைத்தேன். தமிழ்த்தாயின் தலைமகனாக இருந்து தமிழ்மொழியை வளர்த்துத் தமிழ் இன உணர்வை இளைஞர்களிடையே எழுப்பும் தங்கள் பெருந்தொண்டில் அடியேனை ஒரு தொண்டனாக இணைத்துக் கொள்கிறேன். இனி நம் உ.த.மு.க பற்றியும் தென்மொழி இதழ்பற்றியும் பரப்பும் பணியை மேற்கொள்வேன். 'ஒன்றிணைந்தால் அல்லது தமிழ் இனத்துக்கு உய்வில்லை''. அவ்வொற்றுமையை எப்பாடு பட்டேனும் ஏற்படுத்திட, தாழ்ந்த தமிழகத்தை, தமிழினத்தை தங்கள் பின் அணிவகுத்து உயர்த்த உண்மைத் தொண்டனாய் உழைப்பேன்.

தமிழினத் தொண்டன், **செ. திருநாவுக்கரசு**, திருச்சி-17.

0, 960: பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய பாவலரேறு ஐயா அவர்கட்கு வணக்கம். தென்மொழி சுவடி கசு. ஓலை க. கண்ணுற்றேன். ஆசிரியவுரையின் முடிவு 'விழி அல்லது அழி' — என் விழிகளில் நீரைச் சுரக்கச் செய்தன. தாங்கள் ஊட்டி வரும் உணர்வு என்றும் வீண் போகாது. ஏறத்தாழ 2500 ஆண்டுகளுக்கும் மேலாக அடிமைப்பட்டிருக்கும்—அடிமை உணர்வுகளுக்கு ஆட்பட்டிருக்கும் — அடிமைத்தனத்தை உணர முடியாமல் அறியாமையில் மூழ்கிக்கிடக்கும் தமிழினம் உணர்வு கொள்ள, எழுச்சிபெற பெருமுயற்சியும் பேருழைப்பும், பல்வகையான திறன்களும், அரச தந்திரமும், ஈகமும் தேவை. தமிழின மீட்சிக்குத் தன்னை ஒப்படைத்துக் கொள்ளத் துடிக்கும் தமிழர்களுக்கு அந்நிலையில் தங்களை ஆட்படுத்திக் கொள்ளமுடியாத நிலை. பெரும்பான்மைத் தமிழர்க்கோ அந் நினைவே இல்லை. தாங்கள் எந்நிலையிலும், உறுதி குன்றாமல், உளம் தளராமல் கழகப் பணி புரிந்து வாருங்கள். தமிழினம் தங்களைத் தொடர்ந்து வரும் நாள் வெகுதொலைவில் இல்லை. — **சி. செந்தமிழ்வாணன்**, கீரனூர்.

0: 961:

தன்னலமின்றித் தமிழ்மொழி உயரப்
டன்னலம் பயக்கும் ஆறெலாம் நாடி
இன்னல்கள் எல்லையும எளிதென உன்னி
உன்னாரும் தொண்டினை ஓயாதாற்றுவோய்!
நின்னை ஒப்பார் நீணில மிதனில்

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]

தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர் : **பெருஞ்சித்திரனார்**

புரப்பாளர்கள்: தென்மொழி முல்லைவாணன் (சிங்கை),
தென்மொழி ந.முத்துக்குமரனார், தென்மொழி. ப. துரையரசன்,
தென்மொழி நா. இளமாறன். அமைச்சர் : அழ. இளமுருகன், அறி. இ

(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும்
பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.)

சுவடி: 19] ௨0௧௩ துலை - சுறவம் திசம்- '82 சன 83') [ஓலை: 5

என் தொண்டியக்கத்தில் சில மாறுதல்கள்!

கடந்த மாத இறுதியில், பவானியில் நடந்த 'திருக்குறள் தொடர் சொற்பொழிவின்' இடையில், ஒவ்வொரு நாளிலும் அச் சொற்பொழிவைக் கேட்க வெளியூர்களினின்றும் உள்ளூரினின்றும் வந்திருநத பேராசிரியர்-கள், அறிஞர்கள், அரசு அலுவலர்கள், தமிழன்பர்கள், தென்மொழி வளர்த்தெடுத்த மெய்த்தமிழ் நெஞ்சங்கள் —இவர்களின் திருமுகங்

களைப் பார்க்கப் பார்க்க, மெது மெதுவாய் என் உள்ளத்தில் ஓர் உணர்வு கிளர்ந்து எழுந்து, என்னுள் ஆழமாகப் பதிந்து, ஒரு முழு வடிவம் பெற்றது.

ஏனோ தெரியவில்லை, என் தென்மொழித் தொண்டின் கடந்த 25 ஆண்டுக் காலத்தை ஆழமாகச் சிந்தித்தேன். இதனால், எத்தனை மெய்த்தமிழ் அன்பர்கள், அறிஞர்கள், பேராசிரியர்கள், அறிவாளி-கள் உருவாகியுள்ளனர். இவர்கள் ஆங்காங்கே பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், தொழில் துறைகளிலும், அரசியல், கலைத்துறைகளிலும் அமர்ந்து, தங்கள் தளராத தமிழ்ப்பற்றின் காரணமாக, உண்மையான தூயதமிழ்ப் பற்றுளர்களாகவும், இனநலத் தொண்டுள்ளம் கொண்டவர்களாகவும் மலர்ச்சியுற்று, நல்வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர். ஆனால், இவர்களால் இந்த நாட்டுக்கும், வீழ்ச்சியுற்ற இந்தத் தமிழினத்திற்கும், குறிப்பாக இந்நாட்டிலுள்ள நாலாந்தர, ஐந்தாந்தர ஏழை, எளிய மக்களுக்கும் என்ன பயன் விளைந்தது? இவர்களால் அவர்கள் பெற்ற நலன்கள் எவை?—இவற்றைப் பற்றி மிக ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தது என் உள்ளம்.

தென்மொழியால் தூயதமிழ் நல்லறிவாளர்களாகிய பலர், ஆங்காங்கே பல பாட்டரங்குகளில பங்கெடுத்துக் கொள்வதும், பல பட்டிமன்றங்களில் கலந்துகொண்டு, தங்கள் இலக்கியத் திறன்களை வெளிப்படுத்துவதும், பற்பல சொற்பொழிவு மேடைகளில் அழகுபடப் பேசுவதும், பலர், நல்ல தமிழுக்கு ஆக்கமான நூல்களை எழுதி வருவதும், இன்னும் பலர் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் நல்ல தமிழ்ப் பேராசிரியர்களாக அமர்ந்து தமிழ்மொழியைக் கற்பிப்பதுமாக இருந்து வருவதை, நன்றாக நான் அறிந்து வைத்திருக்கின்றேன். ஆனால், இவர்களால் நம் நாட்டின் அடித்தளங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழினப் பெரும்பான்மை மக்கள் பெற்ற நன்மைகள் எவை?

திருக்குறள் தொடர் சொற்பொழிவைக் கேட்க, பெரும்பாலும் அறிவாளிகளே வந்திருந்தனர். பொதுமக்கள் எனப் பெறுவோர் அந்தச் சொற்பொழிவைக் கேட்க, ஒருவரும் வரவில்லை. அவர்களுக்கு இச்சொற்பொழிவு தேவையில்லையா?—இதுபற்றித் தீவிரமாகச் சிந்தித்தது என் தமிழுள்ளம்! அவர்கள் ஏன் வரவில்லை?

நான் என்ன விளைவை எதிர்பார்த்து இத் தமிழ்த்தொண்டைத் தொடங்கினேன்? யாருக்காகத் தொடங்கினேன்? இந்நாட்டின் பெரும்பான்மையான மக்கள், மிகவும் ஏழை, எளியவர்களாய், நாளும் நலிந்தவர்களாய், அறிவு என்பதையே அறியாதவர்களாய், உணர்வு பெறாதவர்களாய், தாங்கள் அடிமைகள் என்பதையே உணராதவர்களாய், தாங்கள் செல்வர்களாலும், அறிவாளிகள் எனப்படுவோராலும் அன்றாடம் சுரண்டப்படுபவர்களாய், புழுக்கள்போல், விலங்குகள் போல், வாழ்ந்தும் வாழாமலும், நெளிந்தும், இயங்கியும் வருகிறார்களே ; அவர்களுக்கு இத்தகைய சொற்பொழிவுகளால் ஏற்படும் பயன்

என்ன? அவர்களுக்கு நம் கருத்துகள் போய் எட்டவில்லையே! அதனால் அவர்கள் மறுமலர்ச்சி பெற வாய்ப்பில்லையே! —இந்நிலை ஏன்? எண்ணிப் பார்த்தேன்,

தென்மொழியால், அறிவாளிகளையே உருவாக்க முடிந்தது. அறிவாளிகளாக மாறிய அவர்களில் எவரும், தம் நிலைகளினின்றும் கீழிறங்கி வந்து, இங்குள்ள, ஏழை, எளிய மக்களுக்குத் தங்களால் இயன்ற ஏதாமோர் இன நலத் தொண்டைச் செய்ய முன்வரவில்லையே ஏன்? அவரவர்கள், தாங்கள் அறிவாளிகளாக மாறித், தங்கள் தங்கள் பாங்கில், அறிவு நலம் பெறுவதும், பெற்ற அறிவு நலத்தால், தங்கள் தங்கள் வாழ்வையே வளப்படுத்திக்கொள்வதும், தங்கள் தங்கள் மனைவி, மக்கள், சுற்றம் உற்றம், வீடு, நிலம் தோப்புத் துரவு. மாடு கன்று, குஞ்சுகுளுவான்கள் இவர்களைப்பற்றியும், இவர்களின் முன்னேற்றம் பற்றியுமே சிந்திப்பவர்களாக, அவர்களுக்காக உழைப்பவர்களாக, இருந்து வருவதுதானா, நாம் தென்மொழியால் செய்ய விரும்பிய முன்னேற்றம்—? இவற்றைப்பற்றி ஆழமாகக் கருதிப் பார்த்தது என் உள்ளம்!

செல்வர்கள் எப்படித் தம் கரவான உழைப்பாலும், சூழ்ச்சியாலும் தாம் மட்டும் பணக்காரர்களாகி, தாம் எப்படியோ ஈட்டிய அச் செல்வத்தை மற்றவர் துய்ப்பதற்கும், நலம் பெறுவதற்கும் வாய்ப்பளிக்காமல், வைப்பகங்களில் போட்டுவைத்துக் கொண்டு அல்லது நிலபுலம், வீடுவாசல், காடுகரை, தோட்டம் வயல், முதலிய பொருள்களாக மாற்றி வைத்துக்கொண்டு, துய்த்துக் கொண்டு வருகிறார்களோ, அப்படியே, அறிவாளிகளாக மாறிய இவர்களும், தாங்கள் பெற்ற அறிவுச் செல்வத்தைத் தாங்கள் மட்டுமே துய்ப்பதற்தும், நலம்பெறுவதற்குமாகப் பயன்படுத்தியும், அவற்றால் செல்வம் ஈட்டியும், அதைக் கொண்டு, பெயரும புகழும் பெறுவதற்காகப் பல அறிவாளித்தன வழிகளில் ஈடுபட்டுக் கொண்டும் வருவதல்லாமல், வேறு என்ன பயனை இந்நாட்டு ஏழை மக்களுக்குத் தந்து விட்டார்கள்? ஒருபுறத்தே பணவழிச் சுரண்டல்! மறுபுறத்தே அறிவுவழிச் சுரண்டல்! இன்னும் அறிவு வழியிலான அரசியல் சுரண்டல்! கலை வழிச் சுரண்டல்! —இவ்வாறு நாட்டில் நடைபெறும் ஏராளமான நாகரிகச் சுரண்டல்கள்! இவற்றுக்கெல்லாம் விளைநிலமாக இநக்கும் ஏழைமக்கள் அறிவு பெறுவதுதான் எப்பொழுது? உணர்வுபெறுவதுதான் எப்பொழுது? அவற்றால் அவர்கள் தாங்கள் அடிமைகள், என்று உணர்ந்து விழிப்புறுவதுதான் என்றைக்கு? அதனால் இந்த நாடு மறுமலர்ச்சி பெறுவதுதான் என்றைக்கு? ஆழமாக அசை போட்டது என் அன்பு நெஞ்சம்!

தென்மொழியில் வெளிவந்த, வெளிவரும் நூறாசிரியம், உலகியல் நூறு, மகபுகுவஞ்சி—முதலிய உயர்ந்த இலக்கியக் கோபுரங்களிலும், கோட்டைகளிலும், இந்நாட்டின் ஏழை எளிய, ஏமாற்றப்

படும் அறிவுணர்வற்ற—மக்கள் தாம் ஏறிப் பார்ப்பதும், நுழைந்து பார்ப்பதும் எப்பொழுது நடைபெறப் போகிறது? அவற்றுக்கு வழியமைத்துக் கொடுப்பவர்கள்தாம் யார்? அதற்காகத் தம்மை முன்வந்து ஒப்படைத்துக் கொள்பவர்கள் எங்கே? தாங்கள் மேலேறி நிற்கும் நல்லிலக்கிய மாளிகைகளிலிருந்தும், தூயதமிழ்க் குன்றுகளிலிருந்தும், அறிவுநலக் கோட்டைச் சுவர்களிலிருந்தும், கீழிறங்கி வந்து, வரண்ட வெற்று நிலங்களிலும், பள்ளம் படுகுழிகளிலும், பரட்டைத் தலைகளுடனும் மண்கப்பிய மேனிகளுடனும், கந்தை மூடிய சதைக்கூடுகளுடனும் வாழ்ந்து கொண்டிருக்கும் இவ்விலங்கு மாந்தர்களை யார் ஈடேற்றப் போகிறார்கள்? இவர்களுக்கு நம்மிடையில் ஒளிவீசிக்கொண்டிருக்கும் இத்திருக்குறளைப் பயிற்றுவிப்பவர்கள், யார்? நாமெழுதும் நல்லிலக்கியங்களை இவர்களின் செவிகளுக்குக் கொண்டு போவார்கள், எவர்? அவர்கள் எங்கே?—இவை பற்றி விரிவாக எண்ணிப் பார்த்தது என் அறிவு?

நாம் இதுநாள் வரை என்ன செய்து கொண்டிருக்கிறோம்? நாம் உயிரைத் துவட்டி, உடலணுக்களைச் சிதைத்து, உணர்வுத் தீயினால் அறிவுக் கொழுப்பை உருகவைத்து, வெளிப்படுத்தும் பல்லாயிரக் கணக்கான நல்லிலக்கிய மூட்டங்கள் இவர்கள் மேல் போய் படியாது போனதற்குக் காரணம் என்ன? நீண்ட நெடுநாட்களாக நாம் உருவாக்கிப் போட்ட அறிவாக்கங்கள். இவற்றால் பயன்பெறும் அறிவாளிகளால், இடையில், அணைகளாகத் தேக்கப் பெற்று, வேண்டும்பொழுது இவர்களின் வாழ்க்கை வயல்களுக்கே பாய்ச்சப்பெற்று, வளம்பெறப் பயன்படுத்தப் பெறுவதல்லால், அவ்வயல்வெளிகளின் வரப்போரங்களில் புற்களாகவும் கற்களாகவும் விழுந்து கிடக்கும், அவ்வேழை எளிய மக்களுக்குப் போய் அவை உதவுவது எப்பொழுது?—இதுபற்றிய எண்ணங்கள் என்னுள் மேலோங்கி நின்றன.

இதுவரை நான் தமிழுக்காகவும், இம்மக்களுக்காகவும், உழைத்த உழைப்பை எண்ணினேன். என் உடலில் வந்து அப்பிக்கிடந்த கொழுமையான சதைகள் கரைந்து, காய்ந்து, ஈரம்வற்றிப்போகுமளவிற்கு என் உடலுறுப்புகள் ஓயாமல் இயங்கி வந்துள்ளன. என் மூளையில் மடிப்புகள் தோன்றுமளவு அறிவுக் கொழுப்பை உருக்கி ஊற்றியிருக்கின்றேன். என் கண்கள் அவ்வேழைகளின் பொருட்டு அழுது அழுது வற்றிப் போய்விட்டன! அவர்களுக்காக, அவர்களுக்கு வந்து வாய்க்காத நலன்களைத் தேடித் தேடி அவை ஒளிமழுங்கி வருகின்றன. என் கைகள் ஓயாமல், அவர்களின் பொருட்டு. உழுது உழுது, மெலிந்து சாம்பி வருகின்றன. என் நெஞ்சாங்குலையின் ஒவ்வொரு துடிப்பும் அவர்கள் அறிவுபெறுவதன் பொருட்டும், நலமடைவதன் பொருட்டும், செலவிடப் பெற்றிருக்கிறது. என் மூச்சுயிர்ப்பு ஒவ்வொன்றும் அவர்களை எண்ணி ஏங்கி ஏங்கியே வெளிப்படுத்தப்

பெற்றிருக்கின்றது. ஆனால், அவற்றால் கிடைத்த பயன்? அவற்றின் ஒட்டுமொத்தமான பேருழைப்பு, அதன் வெளிப்பாடு, அவர்களைப் போய் எட்டவே இல்லையே!—இஃது ஏன்?

அவர்களுக்காகத் தொண்டையின் ஒலி நாளம் துடிக்கத் துடிக்க' நான் கத்திய ஒலியலைகள் எங்கேபோய்ப் புதையுண்டன? அவை போய், அவ்வேழைகளின் செவி வாயிலை எட்டவே இல்லையே! யாருக்காக இவற்றை நான் செய்தேன்? செய்கிறேன்? இவ்வேதுங்கெட்ட அறிவாளிகளுக்காகவா? தாங்கள் பெற்ற அறிவு ஒளியினால், வாழ்க்கையின் மேடு பள்ளங்களைக் கண்டு தெளிந்து, பார்த்து நடையிடுகையில், தாங்கள் திரட்டிவைத்திருக்கும் அறிவு மூட்டைகளிலிருந்து ஒரு சிறு பருக்கைதானும் இவ் வெளியவர்களுக்குச் செலவிடப் பெற வில்லையே! —அஃது ஏன்?

மதவாசிரியர்களைப் போலும், கதைக்கற்பனையாளர்களைப் போலும் நான் போடும், என்னுடைய ஓலங்களும் அல்லவா, காற்றில் கரைந்து போய்க்கொண்டிருக்கின்றன! அல்லது அவற்றைக் கேட்ட அவ்வறிவாளித்தனங்களைச் சேமித்து வைத்திருக்கும் மூட்டை முடிச்சுகளில் போய்க் கட்டுண்டு கிடக்கின்றன! அவற்றை அவிழ்த்து, அவர்களின் முன் உதறிக் காட்ட ஒருவரும் முன்வர வில்லையே! அறிவுப் பரண்களில் ஏறி அமர்ந்து கொண்டு, கீழிறங்கி வந்து வெட்ட வெளிகளில் நடக்க மறுக்கும் அறிவாளித்தனங்களை உருவாக்கவே, என் தென்மொழியின் விலைமதிப்பற்ற பக்கங்கள் வீணடிக்கப்பட்டிருக்கின்றன. — இவை பற்றிச் சிந்தித்தேன்; சிந்திக்கிறேன்!

ஆளுக்கோர் இயக்கம்! ஆளுக்கோர் இதழ்! அத்தனையும் அறிவு வழிச் சுரண்டல்களாகப் போய்விட்டன. புகழ் ஈட்டங்களாகப்போய் விட்டன. தமிழின நலத்தை நோக்கியனவாகப் புதுப் புதுக் கோணங்களில், புதுப்புதுச் சிந்தனைகள் தோன்றி அறிவாளித்தனங்களுக்கு இரைபோடத் தொடங்கிவிட்டன. மக்கள்காடுகளை அவை உழத்தொடங்கி வருமான வேளாண்மையையும், பெயர்—புகழ் கதிரடிப்புகளையும் செய்ய முற்பட்டு விட்டன!

இவற்றுக்கிடையில், நம் முனைப்பான செயல்களுக்கு ஒரு சிறு பயனும் இருப்பதாக உணர முடியவில்லை. ஒருவேளை, கடந்தகாலத் தென்மொழி முயற்சிகளால், தூயதமிழ்த் தேவை, ஓர் இன்றியமையாமை, அறிவுப் புலங்களை உழுதுகொண்டிருப்பவர் பாங்கில், ஒரு நிலைநாட்டுதல், வலிவு பெற்றிருக்கலாம். தமிழ் வேளாண்மை செய்பவர்களிடம் இருந்துவந்த தூயதமிழ் முனுமுனுப்பைக் குறைப்பதற்குத் தென்மொழி பயன்பட்டிருக்கலாம். மற்றபடி, இதன் தொண்டில் நம்பிக்கை கொண்டு, தாங்கள் இருக்கும் உயர்நிலைகளினின்று, வெட்டவெளிக்கு இறங்கி வந்து, நம்மோடு தோளுக்குத்

தோளாகத் துணைநிற்கும் எண்ணமுடையவர்களை, நாம் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியுள்ளது.

அவர்கள் தென்மொழியால் பெற்ற உணர்வையும், அறிவையும், அவர்களின் தனிநல முன்னேற்றங்களுக்காகவே பயன்படுத்திக் கொள்கின்றனர். அந்த அளவில் அவர்கள் தென்மொழி முத்திரையைத் தங்கள் பெயர்களுக்கு முன்னால் இணைத்துக்கொண்டு, தங்களுக்கென்று ஒரு தகுதியை உருவாக்கிக் கொண்டார்கள். அந்த வகையில ஒரு சிலரிடம ஒரு சிறு நன்றி உணர்வு கூட இருப்பதாகச் சொல்லமுடியாது. இன்னும் பச்சையாகச் சொல்வதானால், தென்மொழியால் பயன்பெற்ற என் தலைமையாசானிடமும் அதை நான் பார்க்கவில்லை. அதற்குத்தான் தென்மொழி அவர்களுக்குப் பயன்பட்டிருக்கிறது. மற்றபடி அவர்களால் மக்களுக்குப் பயனில்லை. பயன் ஏற்படும் என்று நம்புவதற்கான அறிகுறியும் தென்படவில்லை.

என்னை வரவேற்பதிலும், வாழ்த்துவதிலும், எனக்குப் பெருமை செய்வதிலும், பணம் கொடுத்து உதவி செய்வதிலும் அவர்கள் போட்டி போட்டுக்கொண்டு ஈடுபட முன் வருகிறார்கள். ஆனால், என்னோடு களத்தில் இறங்க அவர்கள் தயங்குகிறார்கள்; முணுமுணுக்கிறார்கள்; சாக்குப் போக்குக் காட்டுகிறார்கள்; அவற்றை மக்கள் அடையாளம் கண்டு கொண்டு விடாதபடி, என்மேலேயே சேற்றை வாரி மறைமுகமாகப் பூசுகிறார்கள்! உண்மை, நேர்மை, விடாமுயற்சி, ஊக்கம், ஒழுக்கம் இவற்றால் புடமிட்டுக் கொண்டு செய்யப்பெறும் என் தென்மொழித் தொண்டையே மாசுபடுத்திக் காட்டுகிறார்கள். மற்றபடி, தென்மொழி இவ்விருபத்தைந்தாண்டுகளாகச் செய்த—செய்து வருகிற தூயதமிழ்த் தொண்டில் ஓர் எள்ளின் மூக்கத்துணையாகிலும் இவர்களால் செய்துவிட முடியுமா என்று எண்ணிப் பார்க்கத் தயங்குகிறார்கள். தென்மொழி என்னும் சாணைக்கல்லில் இவர்களின் மூளை மழுங்கிய அறிவுணர்வுகளைத் தீட்டிக் கூராக்கிக் கொண்டு, தென்மொழியால் இவர்கள் தம் பக்கங்களைப் பட்டைத் தீட்டி ஒளியேற்றிக் கொண்டு, என்னையே குத்திக் கூர்பார்க்கவும், எனக்கே ஒளியேற்றவும் இவர்கள் முனைகிறார்கள். இப்படிப்பட்டவர்களையே தென்மொழி கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக உருவாக்கி விட்டிருக்கின்றது. இவ்விழல்களுக்கு இறைத்த நீராகவே தென்மொழி பயன்பட்டிருக்கின்றது. இத்தகைய அறிவாளித்தனங்களை உருவாக்கவா, தென்மொழியை முட்காட்டினின்று பறித்தெடுத்தேன்? முடை நாற்றக் குப்பை கூளங்களினின்று பெயர்த்தெடுத்தேன்?—கொதிக்கும் பாலைநிலங்களில் கொப்பளிக்கும் பாதங்களுடன் நடையிடச் செய்தேன்?

"பாட்டெழுதிக் கைசோர்ந்தோம்!
பண்ணிசைத்து வாய்வலித்தோம்!
ஏட்டில் பலவாறாய்
எழுதி முழக்கமிட்டோம்!"

கால்நடையாய்ச் சென்று,
மணிக்கணக்காய்க் கண்விழித்து,
நால்வகையா நம்மவர்க்கே
வந்த நலியெல்லாம்,
ஒக்க எடுத்துரைத்தோம்!
ஓங்கு மறஞ்சொன்னோம்!
தக்கவே நல்வினைகள்
தாழா திவண்புரிந்தோம்!

....

அம்மவோ! ஈங்கிவற்றால்
ஆனபயன் ஒன்றுமில்லை!
ஈங்கிவர்க்குச் செய்துவந்த
எல்லையிலா நன்முயல்வும்

தேங்கிநின்ற நல்லுணர்வும்
தீதில் அறவினையும்,
காட்டு விலங்குகளின்
கூட்டத்திற் காட்டினமால்
ஈட்டும் பெரும்பயனிங்
கெத்தனையே கண்டிருப்போம்!

—இத்தகைய அவல ஓலத்தை 1965-இலேயே எழுப்பினேன். (முழு ஓலத்தையும், **கனிச்சாறு**; முதல் தொகுதி 137-ஆம் பாடலாகிய 'துன்பம் தொடர்க' என்பதில் கண்டு கொள்க!)

என் வாழ்வில் பாதிக்குமேல் கழிந்துவிட்டது. **தென்மொழியில் உருவாகிய அறிவாளித்தனங்கள் தந்நல வேளாண்மைகளையே செய்வதற்குப் போய்விட்டன. இனியும் அத்தகைய அறிவாளிகளையே உருவாக்குவதற்கு எனக்கு விருப்பமில்லை** இனி, என் தொண்டு முழுவதும் '**தமிழ்நிலத் தை-**இபக்கத்தை உருவாக்கப்பயன் படவேண்டும். '**தமிழ்நில**' விளைச்சலுக்காக — அதன் அறுவடைப் பயனுக்காக அங்காந்து காத்திருக்கும் ஏழை எளியவர்களுக்காப் என் எஞ்சியகாலத் தொண்டு பயன்பட வேண்டும்! **எனவே 'தென்மொழி'ப் பட்டறையையே மூடத்துணிந்து விட்டேன்.** ஆம்! **அதற்கு மூடுவிழா விரைவில் நடக்கும்!**

செல்வர்களின் மாளிகை வாசலில் தவங்கிடந்து கிடந்து பயனின்றி வறியவனாயும் பெருமூச்செறிந்தும் வெளியில் வரவிருக்கிறேன். 'அறிவாளி'களின் வரவேற்பறைகளில் எனக்காக எடுத்து வந்து போடப்பெற்ற நாற்காலிகள் தேயுமட்டும் அமர்ந்திருந்து பார்த்து விட்டுப் புட்டம் எரிவெடுக்க வெளியேறி வெட்ட வெளிகளில் நடக்கவிருக்கிறேன், என்னை வரவேற்பவர்கள், வாழ்த்துகிறவர்கள், என்னைப் பாராட்டிப் பாட்டெழுதுபவர்கள், என் இலக்கியங்களில் ஈடுபட்டு மெய்ம்மறந்து மேனி சிலிர்த்தவர்கள், திறனாய்வு செய்த

வர்கள், ஆராய்ந்து பட்டம் பெற்றவர்கள், பாடங்களாகப் படிப்ப வர்கள் என் பாடல் வரிகளை மேடைதோறும் முழக்கி வீறு கொப்ப ளிக்க வாய்மென்றவர்கள் — ஆகிய அனைவரும் மேலேறி மேலேறிப் போய்க்கொண்டே இருக்கிறார்கள்! ஆனால், என் பாடலுக்குக் கருவாய், உரைக்கு வித்தாய் நின்று என்னை எழுதத் தூண்டியவர்கள், — அந்த ஏழை, எளியவர்கள் - எந்தமிழினத்தின் அடியில் ஆழத்தில் தேங்கிக் கிடக்கும் கசண்டுகளாய் — அழுந்திக்கிடக்கும் தேரைகளாய், நசுங் கிக் கிடக்கும் பூச்சிகளாய் உள்ளவர்கள் — அந்த ஏழை மக்கள் அவர் களின் கண்ணீர் இன்னும் வற்றாத ஓடையாய்ப் பெருக்கெடுத்த வண்ணமாகவே இருக்கிறது.

அவர்களைக் கவனிப்பார் எவருமில்லை. அரசியல்காரர்களின் வஞ்சகச் சூழ்ச்சிக்கு ஆட்பட்டுக், கட்சிக் கோவலர்களால் ஓட்டி வளைக்கப் பெற்றுப் பளப்பளத்துப் பட்டொளி வீசிப்பறக்கும் கொடிக் கொட்டில்களிலும், கொள்ளைப் பட்டிகளிலும் அடைக்கப்பட்டுக் கிடக்கின்றனர். அவர்களின் மடிப்பால்கள் நாள்தோறும் கறக்கப் படுகின்றன. மேய்ப்பர்களின் நாச்சுவை தணிக்கும் இறைச்சிக்காக அவர்களில் பலர் நாள்தோறும் அடிபடுகின்றனர். அம்மேய்ப்பர்கள் கொண்டாடும் வெற்றி விழா இரைச்சல்களில், அந்த அடிமாடு களின் அவல ஓலங்கள் கரைந்து போகின்றன.

அவர்கள் கிட்ட நெருங்கி அவர்களுக்கு அறிவூட்டுவார் யாரு மில்லை; உணர்வூட்டுவார் எவருமில்லை! இன்னுஞ் சொன்னால் அவர்களை வைத்தபடியே வைத்திருந்தாலதான், இவர்கள் மடி நிரம்பும் என்று நினைக்கிறார்கள், கட்சி மேய்ப்பர்கள்; (இவர்களைக் கட்டி மேய்ப்பவர்கள்). குடி சிறக்கும் என்று எண்ணுகிறார்கள், 'அறிவாளி'க் கோவலர்கள்! கலைக் கோமாளிகள், அவர்களைப் பணங் காய்க்கும் மரங்களாய் எண்ணித் திரைப்பட, கலையிதழ் கொக்கி வாங்குகளால் — நாள்தோறும் வேளைதோறும் அவர்களை ஒட்ட உலுக்கிக் கொண்டிருக்கிறார்கள். என் உள்ளம் என் பாடல் கதைத் தலைவர்களுக்காக மனம் கசிந்து, நேரடியாகவே அவர்களைச் சந்திக்கப் புறப்பட்டு விட்டது.

இனி, தென்மொழி இதழ் படிப்படியாக நின்றுவிடும். அதன் கற்பிப்புப் பள்ளி மூடப்பட்டு விடும். அத்துடன் **'தமிழ்ச்சிட்டும்'** பறப்பதை நிறுத்திவிடும். இருபத்தைந்தாண்டுகளாக அவற்றுடன் பழகி, நடைபயில்வித்த என் நெஞ்சை ஓர் ஆற்றாமைச் சுமை அழுத்து கிறது. பாசக்கை என் மூச்சுப் பையைப் பிசைகிறது! இரவு பகலாக, வெயில் மழை பாராது, மேடு பள்ளம் நோக்காது, இயங்கிய என் கால்கள், கைகள் அதன் பிரிவைப் பொறுத்துக்கொள்ளாமல் நடுங்கு கின்றன. நெஞ்சைப் பிடித்துக் கொள்கின்றேன்.

ஓர் அறநெஞ்சம் பேசுகிறது!

அன்பார்ந்த ஐயா,
என் பணிவும், நல்லெண்ணங்களும்.

மதுரை, காமராசர் பல்கலைக்கழகத்தோடு இணைந்துள்ள மதுரை குமுகப் பணிக்கல்லூரியில், உதவிப் பேராசிரியராகப் பணி புரியும் நான், **தென்மொழி** இதழ் படித்துத் தங்களின்பால் ஈர்க்கப்பட்டேன். தமிழுக்காகவும், தமிழனுக்காகவும் ஒப்படைப்போடு (அர்ப்பணிப்போடு) வினையாற்றி வரும் தங்களின் பெருமையை மனத்திற்குள் வைத்துப் பாராட்டிக் கொண்டிருந்தாலும், இதுகாறும் தங்களைப் பார்க்காமலும், தங்களுக்கு மடல் எழுதி அறிமுகப்படுத்திக் கொள்ளாமலும் ஓராண்டுக் காலத்தை வீணாக்கி விட்டேன். அண்மையில், **'தமிழ்நிலத்'**தைப் பார்த்துப் பெருமிதமடைந்தேன்.

எங்கள் கல்லூரியில் குமுகாயப்பணியில் முதுகலைப்பட்டத்திற்கான (Main Social Work) கற்பிப்பும், பயிற்சியும் தருகிறோம். எங்கள் இயக்குநர் திரு. தளபதி (கேப்டன்). த.வே.பெ. இராசா அவர்கள் முற்போக்கான எண்ணங்களும், தமிழ்ப்பற்றும் உடையவர்கள். குமுகாயப்பணி (Social Work) தொடர்பான நூல்களை நல்ல தமிழில் நம்மவர்களுக்குத் தந்து, இன ஒற்றுமைக்கும், மேம்பாட்டிற்கும் பாடுபட நினைப்பவர். ஒரு சில கல்லூரிகளில் மட்டும் ஆங்கில வழியில் முதுகலைப் பாடமாகக் கற்பிக்கப்படும் குமுகாயப்பணி அறிவியலைத் தமிழ்வழியில் மேல்நிலைப்பள்ளிகளிலிருந்தே கற்பிக்க வேண்டுமென்று ஆர்வப்படுபவர்.

தமிழ்நாட்டில் குமுகப்பணிக் கல்விக் கற்பிப்பை (Teaching) நடத்துபவர்கள். மக்கள் தமிழுணர்வில்லாதவர்களாகவும், மேலைநாட்டுச் சிந்தனைப் போக்கைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுபவர்களாயுமிருக்கின்றார்கள். இதனால் ஆற்றல் வாய்ந்த ஒரு பாடத்திட்டம் நடைமுறைக்கு ஒவ்வாததாகப் போய்க் கொண்டிருக்கிறது.

(முன் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், அதற்கீடாகத் **'தமிழ்நில'**மும், உ.த.மு.க. இயக்கமும் வலிவு படுத்தப் பெறும். மிக மிக விரிவாக்கப்பெறும். எஞ்சிய என் மூச்சையெல்லாம் அவற்றுக்கே பயன்படுத்துவேன். அவற்றை ஓரளவு வலிவு படுத்தி விட்டு, 1985 முதல் என் **'திருக்குறள் மெய்ப் பொருளுரை'**யை, எதிர்காலத் தமிழினத்திற்கு என் எய்ப்பில் வைப்பாக, ஈடடமாக—விருப்ப ஆவணமாக—எழுதி வைப்பேன். என் உயிரோடு உயிராகக் கலந்த, உணர்வோடு உணர்வாக ஒன்றிய அன்புள்ளங்கள் என்னைப் பொறுத்துக் கொள்ளுமாக! என் இயக்க உணர்வுகளை—என் வளர்ச்சிகளைத் தாங்கிக் கொள்ள முடியாத—பொறாமை உள்ளங்கள்—புழுங்குகின்ற நெஞ்சங்கள்-நிறைவுறுமாக! விரைவில் **தென்மொழி** இறுதி விடைபெறும்! —**பெருஞ்சித்திரனார்.**

மேலைநாடுகளில் வியத்தகு வலிமையோடு இன விழிப்புணர்ச்சிக்காகவும், மேம்பாட்டிற்காகவும் பயன்பட்டுக் கொண்டிருக்கின்ற இவ்வறிவியல் அணுகுமுறை, இங்கே ஆங்கில வழியில் கற்பிக்கப் படுவதாலும், அதன் உத்திகளை தமிழ் வயப்படுத்தாததாலும் பயனற்றுப் போய்க் கொண்டிருக்கிறது. இனவுணர்வுள்ள யாருக்கும் இந்நிலை மனத்துயரைத் தரும்.

குமகாயப்பணி அறிவியலைத் தமிழ்ப்படுத்த வேண்டும் என்ற ஆர்வத்தில், சிறிய அளவில் தரமான தமிழ் இதழ் ஒன்றை வெளியிட ஏற்பாடுகள் செய்து வருகின்றோம். தனிப்பட்ட முறையில் இம்முயற்சி பொருளிழப்பை உண்டாக்கிவிடும் என்று பலர் எச்சரித்தாலும், "இழந்தாலும் தாழ்வில்லை; இனத்திற்குச் செய்த நல்லுதவியாக இருக்கட்டும்" என்று துணிவுடன் எங்கள் இயக்குநர் இம்முயற்சியில் இறங்கியிருக்கின்றார்.

என்னிடமுள்ள தமிழார்வமும் இனஉணர்வும்-இதழை உருவாக்குவதிலும், வெளிக்கொணர்வதிலும் பெரும் பொறுப்பை ஏற்கும்படி செய்திருக்கின்றது.

தமிழுக்கும், தமிழருக்கும் உதவப்போகும் இப்பணியில் எங்களை ஊக்கப்படுத்தவோ, நல்வாழ்த்துக் கூறவோ, வழி காட்டவோ யாருமே இல்லை என்று நினைத்துச் சோர்வுற்ற பொழுதுதான், தங்களுடைய நினைவு மிகுந்து சோர்வகற்றினேன்.

அறிவியல் முறையாகக் குமகாயச் சிக்கல்களைப்பற்றி எழுதுபவர்களும், குமுகாயவியல், உளவியல் இன்ன பிற மாந்தவியல் பாட இலக்கியங்களைத் தமிழ்ப்படுத்தும் ஆர்வமுள்ள தென்மொழி மற்றும் உ.த.மு. கழக அன்பர்களின் ஒத்துழைப்பும் எங்களுக்குக் கிடைத்தால், எங்கள் ஆர்வத்தைத் தாமிக்கதும், மற்ற கல்வியகங்களுக்கு முன்னெடுத்துக் காட்டாயுமிருக்கக் கூடியதுமான நல்வினையாக மாற்றி விடுவோம்.

ஐயா அவர்களுக்கு இருக்கக்கூடிய எத்தனையோ பொறுப்புகளிடையில், எங்களைப் பற்றியும், எங்கள் முயற்சியைப் பற்றியும் சிறிது சிந்தித்து, வழிகாட்டியருள வேண்டுகிறேன்.

இனமேம்பாட்டிற்காகச் செய்யப்படும் எச்சிறு முயற்சியையும், இரு கைகள் தட்டி ஊக்கப்படுத்தும் ஐயா அவர்களிடமிருந்து மிக ஆர்வத்தோடு மடல் எதிர்பார்க்கின்றேன்.

தமிழுக்காகவும், தமிழனுக்காகவும் தாங்கள் செய்து வருகின்ற பணிகளில நானும் பங்குபெற இம்மடல் அறிமுகம் உதவிடுமென்று நம்புகிறேன்.

ஐயா அவர்களுக்கு மீண்டும் என் நல்லெண்ணங்களைத் தெரிவித்துக் கொண்டு இம் மடலை முடிக்கின்றேன்.

பணிவோடும், அன்போடும்

பேரா. சீ. அரங்கசாமி, க.மு., உதவிப்பேராசிரியர்,
மதுரை குமுகியல் பணிக் கல்லூரி, மதுரை—625 002.

உட்கார்ந்த இடத்தில் அப்படியே இன்னும் கொஞ்சம் ஏந்தாக உட்கார்ந்து கொள்ளுங்கள். உங்கள் கைகளில் வகுப்பறைகளையும், நூலகங்களையும் உருவாக்கப் போகிறோம்....

நீங்கள் + மூன்று பேர் = ...

இந்தியத் தாளிகைப் பதிவாளர் தரும் புள்ளி விளக்கங்களிலிருந்து நம் நாட்டில் பதிவு செய்யப்பெற்றத் தாளிகைகளின் எண்ணிக்கை ஏறக்குறைய பதினாறாயிரமாம். ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ ஆயிரத்து ஐந்நூறு புதுத்தாளிகைகள் பதிவு செய்யப் பெறுகின்றனவாம். உங்களையும் சேர்த்து நம் நாட்டில் தாளிகை வாங்குபவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய நானூற்று ஒன்பது இலக்கத்திற்கும் அதிகம்.

தமிழில் மட்டும் ஏறக்குறைய எழுநூறுக்கும் மேற்பட்ட தாளிகைகள் பதிவாகியுள்ளன. தமிழில் புதுத் தாளிகைகளின் வெளியீடும், விற்பனையும் ஆண்டொன்றுக்கு ஐந்து விழுக்காடு மிகுதியாகி வந்துள்ளது. தமிழ்த் தாளிகைகளின் மொத்த விற்பனை நாற்பத்து ஓர் இலக்கத்திற்கும் சற்று மிகுதி. தமிழ் நாட்டில் எழுதப் படிக்கத் தெரிந்த நூறு பேர்களில் நான்கு பேர்களே தாளிகை வாங்குகிறார்கள்.

சுவீடனில் நூற்றுக்கு ஐம்பது பேர்களும், அமெரிக்காவில் நூற்றுக்கு முப்பத்து மூன்று பேர்களும், உருசியாவில் நூற்றுக்கு இருபத்தெட்டு பேர்களும், தாளிகை வாங்கிப் படிக்கிறார்கள். நம் நாட்டில் உங்களையும் சேர்த்து நான்கு பேர்களே தாளிகை வாங்குகிறார்கள். உங்களுடன் இன்னும் பத்து, இருபது பேர்களை உருவாக்க வேண்டிய வரலாற்றுக் காலகட்டம் வந்துவிட்டது.

ஏக்கந்தீர....

நமக்குப் புதுச்சிக்கல்கள் உருவாகியிருக்கின்றன. புதுச் சிக்கல்கள் தீர பழைய முறைகளைக் கையாண்டு சலிப்படைந்து போய்விட்டோம். நம் வெற்றியும், மகிழ்ச்சியும் நம் அணுகுமுறைகளை மாற்றிக் கொண்டாலன்றி வேறு வழியில் கிட்ட வாய்ப்பில்லை. அணுகுமுறைகளை மாற்றிக்கொள்ள நம் அறிவில் தெளிவு பிறக்க வேண்டும். நம் அறிவில் தெளிவு பிறக்க வேண்டுமென்றால் நாம் புதியதாகக் கற்றுக் கொள்ள வேண்டும்.

நாம் புதியன கற்கும் பொருட்டு (இந்தியத் தாளிகைகள் செய்த செயல்களும், புதுமைகளும் பலப்பல. இந்தியத் தாளிகைகள் எதுவுமே செய்யவில்லையென்று) அவற்றின் செயல்முறைகளோடு சினந்து கொண்டு, புதியதாகச் செய்ய வேண்டுமென்ற ஆர்வத்தினால், புதுத்தாளிகைகள் தோன்றி நாள்தோறும் புதுமைகளை நிகழ்த்தி வருகின்றன.

புதுமைகள் நிகழ்ந்து கொண்டிருந்தாலும் ஏக்கங்கள் தொடரத் தான் செய்கின்றன.

வலம், இடம்; இன்பம், துன்பம்; வடக்கு, தெற்கு; என்ற உரை, எதிர்உரைகளைத் திணிக்காமல் மாந்தனை ஒரு முழுமையாக வைத்துக்கொண்டு, அவனுடைய அறிவு, ஆளுமை வளர்ச்சிக்கு உதவக் கூடிய தாளிகைகள் இல்லையே என்ற ஏக்கத்தை சார்பாளர்களும் உணர்கிறார்கள், சார்பற்றவர்களும் உணர்கிறார்கள்.

பொறுப்புள்ள நாலுபேர் கடினஉழைப்பிற்கும், ஈகத்திற்கும் அணியமாகிவிட்டால் ஏக்கமென்பது இல்லாமல் போய்விடும். இப்படித் தான் தீர்க்கமுடியாத ஏக்கத்தை 1969-ஆம் ஆண்டு, மதுரை குமுகப் பணிக் கல்லூரியை ஒரு பட்ட மேற்படிப்புக் கல்லூரியாக நிறுவியதன் மூலம் தீர்த்தோம். இப்பொழுது தாளிகைகள் பால் நமக்கிருக்கும் ஏக்கத்தைத் தீர்க்க ஈகத்திற்கும், கடினஉழைப்பிற்கும் அணியமாகி விட்டிருக்கிறோம்.

உங்கள் கைகளில்...

கல்வி நிறுவனங்களின் பணி வகுப்பறையோடு நின்று விடுவதில்லை. இருந்தாலும் இந்தியாவின் இலக்கக் கணக்கான கல்வி நிறுவனங்களால், வெளியிட வேண்டிய பதிவுசெய்யப்பட்ட தாளிகைகளின் எண்ணிக்கை நூற்று ஐம்பத்தெட்டுதாம். நாலரை இலக்கம் படிகள் வரை விற்பனையாகும் இத்தாளிகைகளின் விற்பனை, மொத்த விற்பனையில் ஒரு விழுக்காட்டிற்கும் குறைவே. இது முயற்சியின்மையைக் காட்டுகிறது.

அறிவு விளக்கத்திற்காக யார் யார் ஏங்கிக் கொண்டிருக்கிறார்களோ அங்கெல்லாம் நாங்கள் நுழைந்து பார்க்க எங்களை நாங்களே இசைவிப்பதுதான் உண்மையான பொறுப்புணர்வு என்று கருதுகிறோம்.

உங்களுக்கான எங்கள் பொறுப்புணர்வின் வெளிப்பாடே குமுகப் பணி' (சமூகப் பணி) என்ற பெயரில் வெளிவரும் தமிழ் மாத இதழ். ஒரு நல்ல தாளிகையின் வாயிலாக எதை எதையெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டுமென்று விருப்பப்பட்டீர்களோ அந்த விருப்பத்தை இவ்விதழ் நிறைவு செய்யும்.

கல்லூரிச் சுற்றடைப்புக்குள் மட்டுமன்று, தமிழில் கூட இத் தாளிகை ஒரு புது முயற்சி. குமுகவியல், கல்வியியல், உளவியல், ஆளுமவியல், நாட்டு வழக்காற்றியல், அரசியல், (மெய்ப்)பொருளியல், மாந்தவியல் போன்ற பல்துறைகளைப் பற்றிய செய்திகளை உங்களுக்குப் பிடித்தமான முறையில் இவ்விதழ் வெளியிடும்.

புது முயற்சியாக மட்டுமன்று, முன்மாதிரியாகவும் இவ்விதழ் அமையத் திட்டமிட்டுள்ளோம். நீங்கள் **சமூகப் பணி'** இதழ்

நூல் : மின் இயல் இயந்திரங்களும் அளவைக் கருவிகளும்
ஆசிரியர் : **சொ. குமார். அறி.மு. (பொறி).**
விலை :- **உரு. 19-00.**
பக்கங்கள் : **248.**
கிடைக்குமிடம் : **கு. மனோகர் பதிப்பகத்தார்.**
இராசர் வீதி கானாடு காத்தான் **623103.**
முகவை மாவட்டம்.

தமிழாக்க அறிவியல் நூல்கள் அரிதாக இருந்த நிலையைத் தமிழ்ப் பாடநூல் நிறுவனம் ஓரளவு போக்கியது என்றாலும், அவை மூலநூல்களுக்கு உரைகள் போன்ற தோற்றத்தையே அளிக்கின்றன வல்லாமல், மூல நூலின் முழு நிறைவைத் தரவில்லை என்பது பலரின் எண்ணம். அதற்கு முதற்காரணியமாக நிற்பது, அப்பொத்தகங்களின் அமைப்பும் பதிப்பும் எல்லாத்துறை நூல்களுக்கும் ஒன்றேபோல் அமைந்துள்ளதாக இருக்கலாம்.

இந்நிலையில் **'மின் இயல் இயந்திரங்களும் அளவைக் கருவிகளும்'** என்ற மின் இயல் நூல், ஒரு தனிப் பதிப்பாளனாலும் விலை மிகுதியாகக் கூடாமல் மூலநூல் என்ற தகுதிக்குரிய நிலையில் வெளிவந்துள்ளது, நூலாசிரியரின் இவ்வரிய முயற்சி மிகவும் பாராட்டற்குரியது. ஊக்குவித்தற்குரியது. இந்நூலில் சில குறைகள் தென்படினும் நூலின் தகுதியும், தரமும் உயர்ந்தனவே.

ஒரு மொழியாக்க நூலைப் படைப்பதற்குச் சில இன்றியமையாத தகுதிகள் தேவை. மொழிப்பற்று, துறையில் முழு அறிவு, ஒவ்வொரு

(முன் பக்கத் தொடர்ச்சி)

படிக்கச் செலவிடுகின்ற நேரத்தையும், பணத்தையும் உங்களைவிட நாங்கள் அதிகமாக மதிப்பதால் கட்டுரைகள், செய்திகளைத் தொகுத்துத் தொகுப்பதிலிருந்து, பக்க அமைப்பு மற்றும் அச்சிடும் முறைகளில் கடுமையான தரமான அமைப்புகளைச் செய்யவிருக்கிறோம்.

நீங்கள் உட்கார்ந்திருக்கும் இடத்திலேயே உங்கள் உள்ளங்கைகளில் வகுப்பறைகளையும், நூலகங்களையும் உருவாக்க நாங்கள் மேற்கொள்ளும் புது முயற்சி **'சமுகப்பணி'** மாத இதழ்.

மேலும் விளக்கமாக அறிய, தொடர்பு கொள்ளுங்கள்.

ஆசிரியர், **'சமுகப்பணி'** (மாத இதழ்) மதுரை சமுகப்பணிக் கல்லூரி, அழகர் கோயில் சாலை, மதுரை—2. O

சிறு நுணுக்கத்தையும் சரியாகப் புரிந்து ஏற்றுக் கொண்டநிலை, ஆங்கிலக கலைச் சொல் வரலாற்றறிவு, அதை மொழியாக்கும் போது மொழி மரபுடன் எண்ணி மாற்றுதல் இந்த நான்கு நிலைகளும் மிக இன்றியமையா தவையாகும்.

இனி நூலுக்குள் புகுவோம். இந்நூல், மின்னாக்கிகள் (Generators) உந்தங்கள் (Motors) மின்மாற்றிகள் Transformers) மின் அளவுகளும் அளவைக் கருவிகளும் (Measurements and Measuring instruments) என்ற நான்கு பெரும் பிரிவுகளை நேர் மாற்றுமின்சாரத்தோடு பொருத்தி ஆறு பிரிவுகளாகக் கொண்டது.

நூல் நல்ல விளக்குமுறையுடனும் படவிளக்கங்களுடனும் அமைந்து மேல் நிலைப்பள்ளி மாணவர் முதல் இளம் அறிவியல், பொறியியல் மாணவர்கள் வரை மேற்கோள் நூலாகவும், அடிப்படை நூலாகவும் வைத்துப் பயன்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

நூலில் காணப்படும் சில முகாமையான குறைகள் :

1. கலைச் சொல்லாக்கம் நூலில் மிக இன்றியமையாதது. நூலாசிரியர் பல இடங்களில் வடமொழிக் கலப்பும் நிறைவற்ற மொழி யாக்கச் சொற்களையும் பயன்படுத்தியுள்ளார். பொதுவாக மொழி யாக்கக் கலைச் சொற்களைப் பொறுத்தவரையில் ஏற்கனவே அருமை யான சொற்கள் பல வழக்குக்கு வந்துவிட்டன. அவற்றில் பொருத்த மற்றவற்றை மட்டும் மாற்றி அவற்றையே பயன்படுத்தியிருக்கலாம். ஆனால் ஆசிரியர் பல சொற்களுக்குத் தாமே முயன்று கடைசியில் வட மொழி மடியில் போய் விழுந்திருக்கிறார்.

Principle — தத்துவம் — (மூலக்கொள்கை)
Law — விதி — (நெறி)
Advantage & Disadvantage — அனுகூலமும் (நல்விளைவும் பிரதிகூலமும் (அல்விளைவும்)
Distribution Cable — விநியோக வடங்கள் — (பிரித்தளிப்புக் கம்பி வடம்)

போன்றவை இதற்கு எடுத்துக் காட்டுகள்.

2. ஏற்கனவே பயன்படுத்திய கலைச் சொற்களை ஆசிரியர் கண்ணுருது புதிய முயற்சியில் முயன்று அமைவில்லாத சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்.

Motor — மின்னோடி — (உந்தம்)
Saturation — தெவிட்டுநிலை — (திண்ணிறைநிலை)
Repulsion Motor — விலக்கித்தள்ளும் மின்னோடி (எதிர்த்துதை உந்தம்)
Shaded Pole Motor — துருவநிழல் மின்னோடி (நிழல் துருவ உந்தம்).

போன்ற சொற்களுக்கு நல்ல கலைச் சொற்களாக ஏற்கனவே உள்ளன போகப் புதியனவாகவும் படைக்கலாம்.

3. சொற்கள் உருவாக்கும் போது அதே பொருளில் சற்று மாற்றமுடைய வேறு சொல்லுக்கு அது பொருந்தி விடக்கூடாது. அல்லது அச்சொல்லுக்கு வேறு சொல் நாம் காட்டியாக வேண்டும். அவை சற்று மயங்கும் வண்ணம் ஆசிரியர் பயன் படுத்தியுள்ளார்.

Damper Winding — எழுச்சிச் சுற்று
(ஊக்கத்தடைச் சுற்று)
(இச்சொல்லாக்கத்தில் பொருளே பிழையுறுகிறது)
Spindle — ஊடச்சு (சுழலச்சு)
(coaxial என்ற சொல்லுக்கு 'ஊடச்சு'
என்று முதலிலேயே பயன்படுத்தப்படுகிறது)
Short circuit — மூடிய சுற்று (மின்குறுக்குப் பாய்வு)
(Closed circuit என்பதற்கு இச்சொல் பயன்படுத்தப்படுகிறது)

இது போலும் பல குறைபாடுகள் நூல் முழுவதும் விரவியுள்ளன. இது நூலின் தரத்தை ஒருவாறு குறைத்து விடுகிறது. இதுபோலும் குறைகள் இத்தகைய மொழியாக்க நூல்களைப் பயன்படுத்துவதற்கே ஒரு தடையாக அமைந்து விடக்கூடாது.

இவற்றுக்கிடையில் பல சொற்களுக்கு அரிய சொல்லாக்கத்தைப் பொருளூட்டத்துடன் ஆசிரியர் பெயர்த்துள்ளார் என்பதையும் இவ்விடத்தில் குறிக்க வேண்டும்.

Break down point — முறிவுப்புள்ளி
Delta Connection — முக்கோண இணைப்பு
(இடைச்குறை இணைப்பு)
Star Connection — முக்கிளை இணைப்பு
Hysterises loss — தயக்க இழப்பு
Viscosity — பாகுநிலை

(பிசுக்கு நிலை என்ற சொல்லும் ஏற்கனவே உண்டு)

எவ்வாறிருப்பினும், ஆசிரியரின் இவ்வரிய முயற்சியில் குறை-கள் தோன்றுது இருக்க வேண்டும் என்ற எண்ணத்துடனேயே சில குறைகள் சுட்டப்பட்டுள்ளன. ஆனால் உண்மையிலேயே தனிப்பட்ட வெளியீட்டிற்காக, செய்வதற்கரிய முயற்சியையே ஆசிரியர் ஆர்வத்துடன் மேற்கொண்டு செய்துள்ளது மிகவும் பாராட்டற்குரியது. இத்துறையில் ஆர்வமுள்ளோர் அனைவரும் தாங்கள் பயனடையும் பொருட்டும் நூலாசிரியரின் அரியமுயற்சியை ஊக்குவிப்பதற்காகவும் இந்நூலைக் கட்டாயம் வாங்கிப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று மனமாரப் பரிந்துரைக்கின்றோம். விலையும் மிக மலிவு.

— குன்றன்.

வாங்கி விட்டீர்களா ?

மிகக் குறைந்த படிகளே இன்னும் இருப்பதால் உங்கள் படிக்கு உடனே முந்துங்கள்

தமிழ் நாளிகை

(தமிழ் நாள்காட்டி)

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு!

0 மிகச்சிறந்த முறையில் உருவாக்கப் பெற்ற **தமிழ் நாளிகை** விற்பனைக்கு அணியமாகிவிட்டது.

0 வேண்டுதல் மடல்களும் பதிவுகளும் நாள்தோறும் வருகின்றன. எனவே தேவையானவர்கள் உடனே தேவையான நாள்காட்டிகளுக்குரிய முழுப்பணத்தையும் முன்னதாக விடுத்துவிடவும்.

0 **முழுதொகையும் முன்பணமாக வராத எவர்க்கும் நாளிகை அனுப்பப்பெற இயலாமைக்கு மிகவும் வருந்துகிறோம்.**

தனி நாளிகை ஒன்று :	5-00
பதிவில்லா அஞ்சல் கட்டணம் :	1-50
குறிப்பஞ்சல் கட்டணம் :	2-50

0 (குறிப்பஞ்சலிலன்றிப் பொதுவஞ்சலில் விடுத்துத் தவறிப் போனால் நாங்கள் ஒன்றும் செய்ய இயலாது.)

0 ஒரே தடவையில் 25 நாளிகைக்கு மேல் தருவிப்போர்க்குக் குறிப்பு அஞ்சல் செலவு இலவயம்.

0 விரைந்து வாங்கத் தவறுவோர் பின்னர் வருந்த வேண்டா என்று கேட்டுக் கொள்கிறோம்.

0 வெளிநாட்டினர் நாளிகை ஒன்றின் கட்டுச் செலவு 2 உருபாவும், கப்பல் வழி விடுக்கும் அஞ்சல் செலவுக்கு உருபா 9 என்றும் நாளிகை ஒன்றின் விலையுடன் கூட்டி, அதற்குரிய தொகைக்கு, **பிரிட்டிக அஞ்சற் கட்டளை** (British Postal-Order) ஆக வாங்கி விடுக்கவும். கூடுதலான படிகளுக்கும் வானூர்தி வழி விடுக்கவும் எழுதிக் கேட்க.

தென்மொழி

5, அருணாசலத்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

பள்ளிக்குப் போய்வா நீ, கண்ணே!

(உரைப்பா) — இரணியன்.

கண்ட இடத்திலே நின்றுகொண்டு
எதையாவது தின்றுகொண்டு
எங்கோ பார்த்தபடி
என்னவோ நினைத்தவாறு...
எத்தனைப் பன்றிகள்! எத்தனைப் பன்றிகள்!
எந்நேரத்திலும் எப்படியாகவும்
ஊடே பாய்ந்து அவை ஊறு செய்யலாம்!
எச்சரிக்கையாக நீ, ஏகி வா கண்ணே!

கடை ஓரங்களில், தெருச் சந்திகளில்
கண்டது பேசிக் கனைத்துக் கொண்டும்
ஓங்காரச் சிரிப்புடன் உலாவிக் கொண்டும்
விழிகள் கனல, வாய்கள் புகைய
தொங்கு தோட்டங்கள் தலைமேல் குலுங்க
எண்ணிலா எண்ணிலா நாய்கள் எதிர்ப்படும்!
எச்சரிக்கையாக நீ, ஏகி வா கண்ணே!

தாறுமாறுகத் தள்ளாடிக் கொண்டு
குறைஉருச் சொற்கள் வாயினுள் உருள,
கண்களை இமைப்பாம்பு அடிக்கடி கவ்வ,
நஞ்சினை அருந்தி நிலைதெரியாமல்,
அகலத்தை நெடுக அளந்துசெல்கின்ற
எருமைகள் கொம்பு இடர்புரியாமல்
எச்சரிக்கை யாகநீ, ஏகிவா கண்ணே!

கைகளில் சிந்தனை நூல்களை ஏந்திக்
கண்களில் உடல்செயும் வெறியினைத் தாங்கி,
உடலெங்கும் நஞ்(சு)ஓடும் எருமைத் தோள்கள்
ஊர்கின்ற சாலைகள் ஊரெங்கும் உள்ளதால்
எச்சரிக்கை யாக,நீ ஏகிவா கண்ணே!

பார்வையில் கனிவும் உதட்டினில் நகையும்
நாவினில் இனிமை நெளிகின்ற சொற்களும்
ஏந்திய நரிகள் எங்கும் திரியலாம்!
எச்சரிக்கை யாகநீ, ஏகிவா கண்ணே!

வேடிக்கை விழிகளே திரிகின்ற தெருக்களில்,
ஆடுகள் மக்களாய் ஆன இக்காலத்தில்
பாலுக்குக் காவலைப் பூனைகள் செய்கையில்

திராவிட இயக்கங்களின் பார்வையில் இந்து சமயம்

[சிந்தனைச் செம்மல், கு.ச. ஆனந்தன், வழக்குரைஞர், கோபி]

'மதம்', 'சமயம்' என்ற இரு சொற்களும் ஏறத்தாழ ஒரேவகைப் பொருளைத் தருபவை. தமிழகத்தில் பண்டைக் காலத்திலிருந்தே சிவனியமும் (சைவம்), மாலியமும் **மெய்ம** (தத்துவ) அளவில் இயங்கி வந்தமைக்குச் சான்றுகள் உண்டு; ஆனால் பௌத்தத்தையும், சமணத்தையும் தவிர 'நிறுவப்பட்ட மதம்' (Established Religion) எதுவும் நடைமுறையில் இங்கு இருக்கவில்லை. இறைக்கும் மாந்தனுக்கும் உலகுக்கும் இடையே உள்ள தொடர்புகளைக் **'காட்சிகள்'** அல்லது **'தரிசனங்கள்'** என்ற மெய்மம் (தத்துவங்கள்) பல்வேறு வகைகளில் விளக்கி வந்தன. அவை சமயங்கள் அல்ல.

தமிழகத்தில் இந்து சமயம்!

இன்றைய நிலையில் 'மதம்' என்பதற்குத் தரப்படும் விரிவான பொருளில் பண்டைத் தமிழகத்தில் 'இந்துமதம்' என்ற ஒரு சமயம் இயங்க வில்லை. அன்றிருந்தது, **'பிராமணிய மதம்'** (Braministic Religion) அல்லது **'வைதிக மதம்'**.

தமிழ் இலக்கியங்களில் 'மதம்', 'சமயம்' என்ற சொற்கள் மூவகைப் பொருளில் பயன்படுத்தப்பெற்றுள்ளன. புலன்களுக்கும் அறிவுக்கும் எட்டாத ஒரு புறவாற்றல், உலகத்தையும் அண்டங்

(முன் பக்கத் தொடர்ச்சி)

நாய்நரி பேய்களே நாயகம் புரிகையில்
ஏதிங்கே காப்பு? ஏதிங்கே காப்பு?
எச்சரிக்கை யாகநீ, ஏகிவா கண்ணே!

வேதமும் கீதையும் மேலறம் யாவையும்
ஓயாது பேசிடும் ஓநாய்கள் கொடையினால்,
நரகலைத் தொட்டு நாய்கள் வரைந்தவை;
இளையர் விழிகொய்யும் ஏற்பாடாய் வந்தவை;
நல்லவர் நெஞ்சங்களில் ஏறி நின்று
நரகலின் பன்றிகள் ஒட்டி நிறைந்தவை!
சுவரொட்டி வடிவாகிச் சுவரெங்கும் தோன்றிச்
சுடும்வாழ்க்கை ஒழுங்கெல்லாம்! சுடும்!சுட்டு
மாய்க்கும்!
இவைகாண நெஞ்சில் எரிபற்று மேனும்
எரியாவும் இணையும்நாள் எதிர்கொள்ளும் என்றே
இப்போது நீ கல்விக்(கு) ஏகிவா, கண்ணே!

களையும் தோற்றுவித்து, அவற்றை அவ்வாற்றலே இயக்குகிறது என்ற மெய்ம (தத்துவ)ப் பகுதியையும்; அதன் அடிப்படையில் மக்களுடைய வழிபாட்டு முறைகள் மற்றும் குமுகாய வாழ்க்கை போன்றவற்றை ஒழுங்குபடுத்தித் தருகின்ற பகுதியையும் சேர்த்துக் குறித்தது, மதம் என்ற சொல்லின் முதற்பொருள். இத்தகையவை இறையுண்மை ('ஆத்திக) **மதங்கள்**' என்று கருதப்பட்டன.

இறைக் கொள்கையை மறுத்து, வைதீக அடிப்படையைத் தகர்த்து, பிறவிச் சுழற்சிக் கொள்கையை மட்டும் ஏற்றுக் கொண்டு, மக்கள் வாழ்க்கையை நெறிப்படுத்தும் **சமணம், பௌத்தம்** போன்றவையும் மதம் என்ற பெயரால் சுட்டப்பட்டன.

வேதத்தைத் (பிரமாணமாக)க் கொண்டு எழுந்த வைதீகத் தத்துவங்களை மறுத்து உலகியலையும் இறைமறுப்பையும் அறிவியலை யும் நடுவாகக் கொண்ட 'உலகாயுதம்' (இன்றைய நாத்திகம்), '**சாங்கியம்**' (இன்றைய பொருள் முதல் கோட்பாட்டின் பழைய வடிவம்) 'நையாயிகம், வைசேடிகம்' போன்ற மெய்யறிவு மெய்மக் கோட்பாடுகளை விளக்குகிற '**தரிசனங்களை**'யும் 'மதம்' என்ற சொல், மூன்றும் பொருளில் குறித்தது.

'**அறுவகைக் காட்சிகள்**', மெய்ம (தத்துவ) நிலையிலிருந்து வளர்ந்து பல்வேறு சமய மரபுகளையும், சடங்குகளையும் ஏற்றுச் '**சமயக் கூறுகளாக**' (Cults) மலர்ந்தன. கால ஓட்டத்தில் அச் சமயங்களும் பிளவு பட்டன.

மெய்யறிவு (ஞான) மெய்மக் கோட்பாடுகளை மட்டும் மக்களி டையே பரப்பி, அறவுடைமை நடைமுறைப்படுத்தியிருந்தால், சமயப் பூசல்களும் சாதிச் சழக்குகளும், ஏற்றத் தாழ்வுகளும் குமுகாயத்தைத் தாக்கி இருக்கா. உயிர்க்கோட்பாட்டை ('**ஆன்மீகத்தை**' மட்டும் அடிப்படை நெறியாக்காமல் அதற்கு முரணான மூடப் பழக்க வழக்கங்களையும், சடங்கு பழக்க வழக்கங் (சம்பிரதாயங்)களையும், ஒழுகல் (ஆசார) மரபுகளையும், தந்நலத்தின் அடிப்படையில் சமயத்தின் சிறப்புக் கூறுகளாகத் திட்டமிட்டு வளர்த்துவிட்டனர், ஒரு சாரார். அதன் விளைவு, அறிவியலும், மெய்யான இறை உணர்வும் – குமுகாய ஒழுங்கமைதியும்–சமன்மைக் கட்டுக்கோப்பும் மறைந் தொழிந்து விட்டன. இறைவன் வகுத்த நெறிமுறையே வருணவொழுக்கம் (வருணச்சிரமம்); சாதி-குலத்துக்கேற்ற தகுதிகள், சடங்குகள் மற்றும் வழிபாட்டு முறைகள் தனித்தனி; அவை எக் காலத்திலும் மாற்ற முடியாதவை, என்ற மூடநம்பிக்கைகளை, 'இந்து மதம்' என்கிற பழைய 'வைதீக மதம்' பேணி வளர்த்தது.

அதன் வழி, குமுகாயத்தின் பெரும் பகுதி மக்கள் மேல், வரை யறையற்ற வல்லாண்மையைச் செலுத்துவதற்கும், நிலையான சுரண்டலை வளர்ப்பதற்கும் வாய்ப்பேற்பட்டது. இவை 'வைதீக மதம்' தந்த கழிவுப் பொருட்கள்.

கி.பி. 5-ஆம் நூற்றாண்டு முதல் 11-ஆம் நூற்றாண்டு வரை வளர்ந்த சைவ, வைணவ சமயங்கள் தம் மெய்ம்ம (தத்துவ)ப் பகுதியை இழந்து, வெறும் தீவிர **'பக்தி இயக்கங்களாக'** மாறி விட்டன. ஆங்கு அறிவு முதன்மை பெறவில்லை; நம்பிக்கையே அடிப்படையாயிற்று. 13-ஆம் நூற்றாண்டில் தோன்றிய **'சைவக் கொண்முடிபும் (சித்தாந்தமும்)'**, தனி ஒரு சமயப் பிரிவேயன்றி, மக்களின் முழுமதமாக ஏற்கப்பட்டதன்று. மதத்தைப் பற்றியும் மெய்ம்மக்காட்சி (ஞான தரிசனங்)களைப் பற்றியுமுள்ள தனிச் **'சமய நூல்கள் (சாத்திரங்கள்)'** வெகு பிற்காலத்தில்தாம் அஃதாவது 13-ஆம் நூற்றாண்டுப் பின்னர்தாம் தமிழில் தோன்றின. அதற்கு முன்பு இருந்தவை, வழிபாட்டு **'தோத்திர நூல்களே'**. இதிலிருந்தே 'இந்து சமயம்' என்ற ஒரு முழுச் சமயம் அதன் மெய்ம்ம (தத்துவ) அளவில் தமிழக மக்களின் ஆழ்நெஞ்சங்களில் தாக்கத்தை ஏற்படுத்த வில்லை யென்பது புலனாகும்.

தமிழகத்தின் சமய வரலாற்றை ஒரு கணம் ஆய்ந்து பார்த்தால் கி.மு. 3-ஆம் நூற்றாண்டிலிருந்தே, சமணமும், பௌத்தமும் நிறுவப் பட்ட மதங்களாக (Established Religions) குறிப்பிட்ட பிரிவு மக்களிடையே திகழ்ந்து வந்துள்ளன, என்பது புலனாகும். தொடக் கத்தில் அறுவகை மெய்ம்மங் (தத்துவங்)களும் உடனிருந்தன. சிவனியமும், மாலியமும் இறை மெய்ம்ம (தத்துவ)க் கோவைகளாக மட்டும் இயங்கி வந்தன. 'வைதீக மதம்', தன் வருணச்சிரமத்துட னும், வேள்விகளுடனும் கழகத் (சங்கத்) தமிழகத்தில் வேர்விட்டுப் பாய்ந்திருந்தது. 'மநுதருமமும்' மற்ற 'தர்ம' சாத்திரங்களும் கழகக் கால மக்களின் ஒரு பகுதியினரையும், சில மேல்மட்ட மக்களை யும், தம் கோரப் பிடிக்குள் ஆட்படுத்தி வைத்திருந்தன, என்றாலும் 'இந்துமதம்' என்ற ஒரு தனிச் சமயம் இருந்ததில்லை.

கி.பி. 3-முதல் 5-ஆம் நூற்றாண்டு வரையிலும் சைவமும் வைணவமும் பல பிளவுகளைச் சந்தித்தன. ஆறுவகை முரண்பட்ட சிறு கூறுகளாகச் சைவம் பிரிந்து போய், சிறுசிறு மக்கள் கூட்டத் தைக் கவர்ந்திருந்தது. வைணவமும் இரு கூறுகளாயின. சீர் திருத்தச் செம்மல் **இராமானுசர்**, புரட்சியாளர் **அப்பர்**, **திருமூலர்** மற்றும் **சித்தர்கள்** போன்றோர், அன்றே புரையோடிய வருண வொழுகத்தையும் சாதிப்பகுப்புகளையும் எதிர்த்துநின்று போராடி **'ஒன்றே குலம் ஒருவனே தேவன்'** என்ற இறைமை நெறியையும், குமுகாய சமநிலையையும் மக்களிடையே பரப்பி வந்தனர். வேதமதமும் பல பிளவுகளைச் சந்தித்தது.

மெய்யான வைதீக மதம் எது, என்று தற்போது யாராவது கேட்டால், **'சனாதனம்'** தான் என்கின்றனர். ஆனால், எது 'சனாதன தர்மம்' என்று திருப்பிக் கேட்டால் அவர்கள் மறுமொழி தருவதில்லை.

'சனாதனம் என்பது இந்து மதத்திற்குப் புறம்பானதா? வேறானதா? சனாதன தர்மக் கொள்கைகளுக்கும், இந்துமதம் என்ற வைதீக மதக்கொள்கைகளுக்கும் என்ன வேறுபாடுகள்? எதிலிருந்து எது தோன்றியது? என்ற வினாக்களுக்கெல்லாம் வரலாற்று அடிப்படையிலான சான்றுகளுடன் யாரும் விடையிறுப்பதில்லை. மேலும் 'இந்துமதம்' பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கும் முன்பே தோன்றிய சமயம் என்றுதான் எல்லா இந்து சமயத்தவர்களும் ஒரே குரலில் கூறுகின்றனர்.

அன்றைய நிலையில் 'வேதாந்தம்' ஒரு புறம் 'துவைதமும்' 'அத்துவைதமும்' மற்றொரு புறமாகவும்; 'சுமார்த்தம்' இன்னொரு புறமாகவும் 'மத்துவம்' வேறொரு பக்கமாகவும் நின்று பலசமயக் கூறுகளாகத் தனித்தனியே இயங்கி வந்தன. புத்தத்தையும், சமணத்தையும் திட்டமிட்டு ஊடுறுவல் செய்து, அவற்றை வைதீக மதத்தின் உள்ளடக்கமாகப் பார்ப்பனீயம் மாற்றிக் கொண்டது.

சாதீயத்தையும், வருணச்சிரமத்தையும் பார்ப்பனீயப் பழைய மரபுகளையும் மறுத்து **'வீர சைவம்'** என்ற புரட்சிநெறி **பெம்மான் பசுவேசுவரரின்** தலைமையில் உருவாயிற்று இப்போது அதனையும் சேர்த்து, இந்துமதம் என்கின்றனர். ஆக, தமிழகத்தைப் பொறுத்தவரை **'இந்துமதம்'** என்ற ஒரு தனிச்சமயம் எந்தக் காலப்பகுதியிலும் இருந்ததில்லையென அறுதியிட்டுக் கூறலாம்.

எது இந்து மதம்?

பல்சமயக் கூறுகளின் கோட்பாடுகளை உள்ளடக்கி, வைதீகத்தின் கொடுமைகளை ஆழப்பதித்து, தனித்தன்மை இல்லாத ஒரு பல்சமயக் கதம்பக் கூளம்தான் இந்து மதம். மதம் என்ற சொல்லின் விளக்கமோ பொருளோ அதற்குப் பொருந்தாது. ஏனெனில் இந்துமதம் என்பது ஒரு மதமேயன்று; பல சமயங்களின் சமய உணர்வுகளின் – வழிபாட்டு மரபுகளின் – கூட்டுத்திரட்சியே, இந்துமதம். அதனைப் பொருள் புரியாமல் அப்பெயரால் அழைக்கின்றனர் (Hinduism is not a Single Religion; but a Conglomeration of Several Cults, Faiths and Beliefs).

அன்றைய 'தலைமை நீதிமன்றம்'(Privy Council) தன் பழைமையான தீர்ப்புரை ஒன்றில் இந்து மதத்தைப் பற்றித் தெளிவாகக் கூறுகிறது; அத்தீர்ப்பு இன்றும் மாறவில்லை; நடைமுறையில்தான் உள்ளது.

'இந்துமதம், வியக்கத்தக்க நெகிழ்வுத் தன்மையையும், அனைத்துச் சமயக் கூறுகளையும் தம்முள் அகப்படுத்தும் ஆற்றலையும் பெற்றது. அதன் இறைமைக் கொள்கை, பல்சமயக் கோட்பாடுகளையெல்லாம் தெரிந்தெடுத்து இசைவுடன் ஏற்றுக் கொள்ளும் இயல்பினையும், நோன்மை (சகிப்பு)த் தன்மையையும், தனி மாந்த (மனித) வழிபாட்டில் வரம்பற்ற உரிமையையும் ஏற்றுக் கொண்டுள்ளது.

உளவியல் கட்டுரை

களவுக்கான உளநிலை

(The Psychology Behind Stealing)

ஏ. கே. கண்ணு.

தங்கள் பிள்ளைகளிடம் காணும் களவு மனப்பான்மை எல்லாப் பெற்றோரும் எதிர் கொள்ளும் பொதுச் சிக்கல்களுள் ஒன்றாகும். பிள்ளைகளின் குமுகாயச் செல்வ நிலை எப்படி இருந்தாலும் இந்த மனப்பான்மை எந்த அகவையிலும் ஏற்படலாம். நான்கு அல்லது ஐந்து அகவையுள்ள பிள்ளைகளும் திருடு பழக்கம் உடையவர்களாகக் காணப்படுகின்றனர். பிள்ளைகளைத் திருடத் தூண்டும் கரணியங்கள் பலவாகும்.

தொடக்கத்தில் இது பழக்கமாக இல்லை; தொடக்கத்திலேயே அவனைத் திருத்திவிட்டால், இதனை முளையிலேயே கிள்ளி விடலாம். எனினும், வாய்ப்புக்கேடாக, பெரும்பாலான பெற்றோர் தம் பிள்ளையைத் தாங்கப் போய், இப் பழக்கத்தைத் தடுப்பதற்குப் பகரமாக மிகுவிக்கின்றனர். தங்கள் பிள்ளைகள் திருடுகின்றனர், என்ற

(முன் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் அதன் குமுகாய நெறிகளோ மிகக் கடுமையானவை; என்றாலும் இந்துமதத்தின் பல பிரிவுகளும், நூற்றுக்கணக்கான சாதிகளும் விரிந்த வேறுபாடுகளைக் கொண்ட சமயப் பழக்க வழக்கங்களை எடுத்துக் காட்டுகின்றன". (1) என்று இந்துமதம் பற்றிய தன்னிலை விளக்கத்தை அத்தீர்ப்புரை கோடிட்டுக் காட்டுகிறது.

இந்து சமயம் என்றால் என்ன? அதனை நிறுவியவர் யார்? அச் சமயத்திற்குரிய நூல்கள் எவை? அதற்கென்று ஒரே சமயத்தலைவர் உண்டா? அவர் கொள்கைகள் எவை? இதுவரை இவ் வினாக்களுக்குரிய சரியான விடையை யாரும் தரவில்லை.

'இந்து', **'இந்துமதம்'** என வழங்கிவரும் சொற்கள் மாநாட்டில் பேசப்படும் எந்த மொழியினின்றும் தோன்றியவை யல்ல; வெளிநாட்டவர்களால் இடப்பட்ட பெயர்கள். இதனைக் **காஞ்சி ஆச்சாரியாரே** ஏற்றுக் கொள்கிறார். 'வெள்ளைக்காரன் நமக்கு இந்துக்கள் என்று பொதுப் பெயர் வைத்தானோ நாம் பிழைத்தோம். அவன் வைத்த பெயர் நம்மைக் காப்பாற்றியது'. (2) என்கிறார்.

வரலாற்றைத் துருவித் துருவிப் பார்த்தாலும் 'இந்துமதம்' என்ற தனிச் சமய அமைப்பு என்றும் இருந்ததாகத் தெரியவில்லை. 'பிராமணிய மதம்' (Brabministic Religion) என்ற சொற்றொடரைத் தான், எல்லா வரலாற்று ஆசிரியர்களும் பயன்படுத்துகின்றனர்.

(தொடரும்)

செய்தி முதலில் காதுக்கு எட்டும்போது, 'தான் செய்வது என்ன என்று அறியாத அகவை அவனுக்கு' என்றோ, 'இது போகக் கூடியது' என்றோ, 'சிறு பொருள்களையே அவன் திருடுகிறான்' என்றோ, 'வேடிக்கைக்காகச் செய்கிறான்' என்றோ விடை கூறி, முன் வந்து பிள்ளைகளை ஆதரிக்கின்றனர்! பல நேரங்களில் அதிக சலுகை காட்டும் தாயர் தம் குழந்தைகளை மறைத்துத் தந்தைக்குத் தெரியாமலும் காப்பாற்றி விடுகின்றனர்! இவை அச்செயலுக்கு ஒரு மதிப்பைத் தருகின்றன; பிள்ளை தூண்டப்படுகிறது. பெற்றோர் தம்மை அறியாமல் குழந்தையின் வளர்ச்சிக்கு அளவில்லா ஊறு செய்கின்றனர். மூன்று அகவைக்கு மேற்பட்ட குழந்தை தான் செய்வதை அறிகிறது. என்ன பொருள் அல்லது பணம் திருடப்பட்டது என்பதுதான் அன்று, இங்கு முதன்மை; திருடுதல் செயலே முதன்மை. திருடும் பழக்கம் தொடக்கத்திலேயே தடைப்படுத்தப்படாவிடில் வளர்ந்து கை மீறிப் போய்விடும்!

என்ன கரணியங்கள் பிள்ளைகளைத் திருடத் தூண்டுகின்றன என அறிதல் பயனுடையதாகும். தங்களைப் பார்க்காது பணியிலோ குமுகத் தொண்டிலோ ஈடுபட்டிருக்கும் பெற்றோர்களது கருத்தைத் தம்மிடம் இழக்கும் ஒரு கருவியாகவே திருட்டை அடிக்கடி நிகழ்த்துகின்றனர், பிள்ளைகள். இத்தகைய சூழலைப் பெற்றோர் எளிதாகத் தவிர்க்கலாம். பல நேரங்களில் கைச் செலவுக்குத் தரப்படும் பணம் பிள்ளைக்குப் போதுமானதாக இருப்பதில்லை. அதனால் தன் தேவைக்த வேண்டியதைத் திருடுகிறான்; நண்பர்களோடு நிலைக்கிறான். கைச் செலவுக்குப் போதுமான தொகை தரப்படவேண்டும். பிள்ளையோடு கலந்து தொகையை வரையறுக்கலாம். வீண் செலவு செய்பவனாக இருந்தால் செலவை மட்டுப்படுத்தும்படி அன்போடு கூறலாம்.

தேவை காரணமாகப் பிள்ளை திருடலாம். கரிக்கோலோ (பென்சிலோ) பயிற்சிப் பொத்தகமோ நேரத்தில் வாங்கித்தராது பெற்றோர் பொறுப்பற்று இருந்திருக்கலாம். ஆசிரியருடைய தண்டனையிலிருந்து தப்பிக்க அவன் திருடலாம். இதுவே பின்னர் பழக்கமாகிவிடும். பொறாமை காரணமாகவும் பிள்ளை திருடலாம். தன் நண்பன் நல்ல தூவலை (பேனா) வைத்திருந்தால் பொறாமையாலே அதைத் திருடுவான். பிடிபடும் அச்சத்தால் அதனைப் பயன்படுத்த மாட்டான்; நண்பனது உடைமையை இழக்கச் செய்த நிறைவு கொள்வான்.

வகுப்பில் 'முதல்'வனாக வர பெற்றோர் தரும் தொல்லையால் பிள்ளை திருடலாம். நல்ல பிள்ளையைத் தாண்ட இயலாததால் தேர்வுக் காலத்தில் அவனைப் படிக்காமல் செய்ய அவனுடைய பொத்தகங்கள், பயிற்சிகள், குறிப்புகளைத் திருடலாம். பெற்றோர் அவன் திறமைக்கு மீறிய நிலையை எட்ட தொல்லைபடுத்தக் கூடாது. தன் செயல் அவர்களுக்கு அவமானத்தைத் தரும் என அவன் அறிவான். அவர்

மரபும் மக்கள் பண்பாடும்

— குண.

ஒவ்வொரு நாட்டினத்திற்கும், வகுப்பிற்கும் தனித்தனி ஒழுக்கங்களும், வழக்காறுகளும், மரபுகளும், இலக்கியச் செல்வங்களும் பண்புகளும், வரலாறும், வளர்ச்சியும், குமுகவியல், உளவியல் கட்டுகளும், மொழியும், மொழிப்பற்றும் உண்டு. இவையாவும் உயிர்ச் செறிவுடன் ஒன்றுகிய நிலையில் அதனைப் பண்பாடு என்கிறோம்.

அகத்தைப் பண்படுத்துவது புறத்தையும் புறஉறவுகளையும் பண்படுத்த உதவுகின்றது. புறஉறவுகளிலான உத்திகளும், பற்றுகளும் அகத்தை மேன்மேலும் பண்படுத்துகின்றன. வாழ்வியல் உறவுகளில் அகத்திற்கும் புறத்திற்கும் இடையிலான கட்டுகள் பல உண்டு. அந்த கட்டுகளே ஒரு குமுகத்தின் பொதுப்பண்பாடாக வெளிப்படுகின்றது. அப்பண்பாட்டினுடைய பொதுநிலையும், தனி நிலையும் முரணியும் ஒன்றியும் ஒன்று மற்றொன்றுகியும் வருகின்றன. அந்த உறவும் இயல்பும் ஒரு தனியாளிடம் அடங்குகின்ற நிலையையே தனிப்பண்பாடு என்று சொல்கிறோம். அத் தனிநிலைக்கும் பொதுநிலைக்கும் இடையிலான முரண்பாட்டில் அறுதிப் பங்கை ஏற்பது பொதுநிலையே ஆகும்.

மரபொழிந்த வழக்குகள் எச்சங்களாகிப் பொருளற்றுப் போகின்றன. அத்தகைய மரபொழிந்த கூறுகளும் ஒரு பண்பாட்டில் உண்டு. தொல்வாழ்க்கையில் இருந்த வழக்குகளை மதங்களின் வழியாகக் குருட்டுத்தனமாகவும், குரங்குத்தனமாகவும் விடாப்பிடி

(முன் பக்கத் தொடர்ச்சி)

கள் மீது தனக்குள்ள வெறுப்புணர்வுக்கு வடிகாலக இதனைப் பயன் படுத்துகிறான். குடும்பத்தில் கட்டுப்பாடு இருத்தல் வேண்டும். ஆனால் அஃது உறுத்துவதாக அமைதல் கூடாது.

பெற்றோர்களின் அன்பும் அணைப்பும் இல்லாமையே பொதுவான கரணியமாகும். பிள்ளைக்குத் தேவையானவற்றைத் தந்து விடுவதோடு தம் கடமை முடிந்ததாகப் பெரும்பாலான பெற்றோர் நினைக்கின்றனர். பிள்ளைக்கு நல்ல உணவு, உடை, பொத்தகம், விளையாட்டுப்பொருள்,கல்வி ஆகியவை முதன்மையானவை என்பதில் ஐயமில்லை; ஆனால், இவற்றிற்கு மேலே, 'தேடப்படுகிறான்! என்ற உணர்வே அவனுக்குத் தேவையாகிறது. நாள்தோறும் கொஞ்ச நேரமாவது பிள்ளைகளுடன் பெற்றோர் உறவாடுதல் வேண்டும். அன்புக்குக் குறுக்கு வழி இல்லை!

நன்றி: 'குமுகாய நலம்' (Soeial Welfare) செப்டம்பர்'82.

யாகப் பிடித்துக் கொண்டு, அந்தச் செத்த குறியீடுகளுக்காக மதச் சண்டைகளையும் சாதிச் சண்டைகளையும் போடுவதும் அப்பண்பாட்டிற்குள் அடங்கும். செத்த வரலாற்றின் செத்த உடம்பைச் சுமந்து வருகின்ற பழமைக் கூறு இதுவாகும். இந்த பழமைக் கூறிலும் கற்பனைத் திறம் உண்டு. ஆனால், இல்லாதொழிந்த உண்மையைப் பெரிதும், நினைவால் போற்றுகின்ற நினைவுக் குறிப்பு அது.

வளர்ந்து வருகின்ற இன்றையப் பொருளியல் உறவுகளுக்குக் கட்டுப்பட்டு வேற்று நாட்டுப் பண்பாட்டுக் கூறுகளை உட்செரித்துக் கொள்வதும் உண்டு. பிற பண்பாடுகளில் இருக்கின்ற நல்லவற்றையும் கெட்டவற்றையும் அவ்வாறு தழுவிக் கொள்வது அப் பண்பாட்டின் நிகழ்காலக் கூறு. பொருளைப் படைக்கவும் ஈட்டவும் செய்வதில் மேலை நாடுகள் எட்டியுள்ள மேன்மையைக் கண்டு நம்மில் சிலர் வியந்து போற்றுகின்றனர். அம் மேலைநாட்டுப் பொருளியலுடன் ஒப்பிடுகையில் தன்னுடைய சொந்த நாட்டுப் பொருளியல் தாழ்ந்ததாக இருப்பதைக் கருதி ஒருவகைத்தாழ்வு மனப்பான்மையைத் தங்களுக்குள் அவர்கள் வளர்த்துக் கொள்வதும் இதற்குள் அடங்கும். நம்முடைய சொந்த நாட்டுப் பண்பாட்டினுடைய சில கூறுகள் காலத்திற்கும் வாழ்வுக்கும் ஒவ்வாதவாகித் தடையாக இருக்கின்றன. அவற்றை முறையோடு எதிர்க்க வேண்டும். மாறாக, சொந்த சூழலை மாற்றவல்ல உளவலிமையும் குமுகிய வலிமையும் இல்லாத நிலையில் சிலரிடம் எழுகின்ற எந்திரவியல் எதிர்ப்புணர்ச்சிகளும் குருட்டுக் கலக உணர்ச்சிகளும் வேற்றுநாட்டுப் பண்பாடுகளை குருட்டுத்தனமாகப் பார்த்தெழுகின்ற போலி நிலையைத் தோற்றுவிக்கின்றன. பிற நாட்டுப் புரட்சிகளை வியந்து போற்றி, அது போன்ற புரட்சியைத் தன்னுடைய சொந்த நாட்டில் நடத்தவல்ல பார்வையும், திறமும், பக்குவமும், பொறுமையும், ஆக்கமும், பண்பாட்டு வேரும் இல்லாமல் ஓர் ஒப்புரவு (சோசலிச)ப் பண்பாட்டை அகமையில் கற்பனை செய்து பார்ப்பது தமிழகப் பொதுவுடைமையரில் பலரின் நிலையாக இருக்கின்றது. அந்தக் கற்பனைப் பண்பாட்டுக்கு உட்படாத சொந்த நாட்டு மரபுகளையும் வரலாற்றையும் பண்பாட்டையும் எடுத்தெறிந்து பேசி, அரிசியில் கல் இருப்பதனால் முறம் அரிசியையே குப்பையில் கொண்டுபோய்க் கொட்டுவதுபோல், நடந்து கொள்வது பண்பாட்டின் நிகழ்காலத் தன்மையாக இருக்கின்றது. பண்பாட்டின் இந்நிகழ்காலக் கூறில் கற்பனை குறைவு. நடைமுறை உத்தி மிகையாக இருக்கின்றது.

அடுத்து வருவது, பண்பாட்டின் வருநிலைக் கூறு. சொந்த நாட்டு வரலாற்றில் நல்லனவும் தீயனவும் உண்டு. மக்கள் நலத்திற்கு ஏற்றவையும், ஏற்காதவையும் உண்டு. குடியாட்சி நெறிக்கு உகந்த மரபுகளும் ஒவ்வாத மரபுகளும் உண்டு. அறிவுக்கு உகந்த

வையும் அறிவுக்கு ஒவ்வாதவையும் உண்டு. அவற்றையெல்லாம் உற்றுக் கற்றுப் பிரித்தறிந்து, நல்லவற்றைப் பேணி, தீயவற்றை விட்டுவிடவேண்டும். வேண்டியதை வைத்துக் கொண்டு வேண்டாததைக் சழிக்க வேண்டும். அவ்வாறு கெட்டதை நல்லதாக்குகின்ற இயங்கியலே—அந்தப் பண்பாட்டின் எதிர் காலத்தன்மை. இந்த நிலையிலும் கற்பனைத்திறம் உண்டு. சென்றதன் நினைவையும், நிற்பதன், பெற்றதன் நடப்பையும் தழுவிய எதிர்காலத்தைப் பற்றிய கற்பனை இது. ஆக்க மூறையிலான கற்பனையும் இதுவே பழமையையும் நடப்பையும் அவற்றின் எதிர்மறையாக்கவல்ல பண்பாட்டுக் கற்பனை இது.

மேற்சொன்ன மூன்று நிலைகளில், பண்பாட்டின் இறந்த காலத் தன்மையில் இயங்கியல் கூறுகள் சில இருக்கலாம். இடையில் வருகின்ற நிகழ்காலத் தன்மையில் எந்திரவியல் நடப்பியல் மிகையாக இருக்கலாம். அப் பண்பாட்டின் எதிர்காலக் கூறு இயங்கியல் நெறியில் வளர்க்கப் படவேண்டும். இல்லையெனில் மாந்தன்மை மேலோங்கிய விடுதலை நிலையை—தன்னுரிமையை—மாந்தவினம் பெற முடியாது.

மக்கள் பண்பாடு பண்பாட்டின் வருநிலையைத் தழுவியது. அதனுடைய அளவுகளையும் செறிவையும் இயங்கியல் திறத்துடன் அகமையில் கற்பித்துக் கொண்டு, புறமையில் செயலாற்றுவதில் தான் அதனுடைய வெற்றியும் இருக்கும். வரலாற்றிலிருந்தும் புறமையிலிருந்தும் முற்ருக அறுத்துக் கொண்டு பறக்காத கற்பனையாக அதனுடைய கற்பனைச் செறிவு இருக்கவேண்டும். நேற்றைய இன்றைய பண்பாட்டு உறவுகளிலும் உறுப்புகளிலும் உயிர்ப்பிலும் இருக்கின்ற முரண்பாடுகளின் ஊழ்பாடுகளை நன்கு அறிந்து, வருநிலையிலான மக்கள் பண்பாட்டின் நெறிகளையும் உறுப்புகளையும் அகப்புற கட்டுகளையும் உளவியலையும் ஊக்கத்தையும் அறுதியிட்டு முடிவு செய்வது அஃதாகும். சென்றதன் இருப்பதன் பண்பட்ட தொடர்ச்சியே வருவது என்னும் கருத்தை இஃது உள்ளடக்கியது.

செருமானிய மொழியில் எழுதுகையில் மார்க்சு 'Aufheben' என்னும் சொல்லை ஆள்கின்ருர். செருமானிய வழக்கு மொழியில் அதற்கு 'எழுவது' என்று பொருள். உள்ளபடியே இதற்கு மறுத்தல் 'அழித்தல்', 'ஒழித்தல்' என்று பொருள். 'காத்தல்' என்னும் பொருளும் இதற்கு உண்டு. காத்தல், அழித்தல் என்றும் நேர்-எதிர் பொருட்கள் இச் சொல்லுக்கு இருப்பதைத் தழுவி மார்க்சுக்கு முந்திய எகெல் இச் சொல்லை எடுதது ஆண்டார். இத்தகைய இயங்கியல் இயற்பாட்டை விளக்குவதற்குக் கருத்து முதலாராயினும் கம்பன் சுட்டிய குறிப்பு மிகச் சிறப்புடையது.

"உலகம் யாவையும் தாமுள ஆக்கலும்
நிலைப்பெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யார்அவர்
தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே!"

— என்னும் பாடல் வரிகளில் அந்த இயங்கியற் குறிப்பு மிளிர்கின்றது. மக்கள் பண்பாட்டைப் படைக்க விரும்புகின்ற பொதுவுடைமையருக்கு இந்தக் கருத்தின் உட்பொருள் ஆழத் தெரிந்திருக்க வேண்டும். இல்லையெனில், பண்பாட்டு மரபுகளை உட்செரித்து மறுத்துப் புதிய பண்பாட்டைப் படைத்துக் காத்தல் என்னும் உத்தியை அறிவது அரிது.

பண்டை மரபுகளையும் பழம் பண்பாட்டையும் இந்த முறையில் அணுகாதது, பண்பாட்டின் மூன்று நிலைகளையும் மறந்த காலவழுவிலும இடவழுவிலும் ஆழ்த்தும். அதனால், பழம் மரபுகளைக் குருட்டுத்தனமாகப் போற்றி அதனுடைய இன்றைய நாளைய வளர்ச்சியை இழிவு படுத்துவதும், அவற்றைக் குருட்டுத்தனமாக வெறுத்தொதுக்கி ஒவ்வாத அகமைப் போக்கில் வெறுங்கையால் முழம் போடுகின்ற போக்கும் எழும். ஆக்கல், இருத்தல், நீக்கல் என்னும் முத்தன்மைகளில் இருந்தவை மிகைப்படுத்தி முற்றுமைப்படுத்துவோர் பழமையர். நீக்கலை மட்டுமே முற்றுமைப்படுத்தி பிற இரண்டையும் மறப்பவர்கள் வரட்டுத்தனத்தவர். இருத்தலையும் நீக்கலையும் உயிர்வினையோடு ஒன்று மற்றொன்றாகின்ற முரண்பாட்டு நிலையில் வைத்து ஆக்கல் என்னும் நிலையைப் பெறுவதே இயங்கியல் மரபு. 'இருத்தி அழித்தல்', 'அழித்து இருத்தல் என்னும் இருபாதிகளாக வைத்து இதை விளக்கிச் சொல்லலாம். மக்கள் பண்பாட்டின உயிர்வினை இவ்வாறுதான் இருக்கும்.

பண்பாட்டிற்கு எல்லைகள் உண்டு. அந்த எல்லைக்கு உட்பட்ட வளர்ச்சியில் சில தனித்தன்மைகள் உண்டு. அதுவே பண்பாட்டின் தேசியத்தன்மை. அந்தத் தேசியத் தன்மை என்னும் தனிநிலையில் மாந்தன்மை என்னும் உலகளாவிய பொதுநிலையும் உண்டு. ஆகவே எல்லையற்ற பண்பாடு என்னும் எல்லைக்குள் மட்டுமே குறுகிய பண்பாடு என்றும் செரல்லி அப்பண்பாட்டை ஒரு தலையாக விரிப்பதும் சுருக்குவதும் தவறு. ஆனால் ஒடுக்குண்ட ஒருநாடு தன்னுடைய விடுதலை உத்தியைக் கருதி தன்னுடைய தேசியப் பண்பாட்டை அரசியலாக்குவ்து சரியே யாகும். ஒடுக்குண்ட நாட்டு மக்களை விடுதலை நோக்கத்திற்காக ஒன்றுபடுத்த முற்படுகின்ற இந்த உத்தியில் மிகையாக்கமும் இருக்கலாம். அப்பொழுது பண்பாட்டு ஆக்கத்தை வழிநடத்துகின்ற பொதுவுடைமையர் அப்பண்பாட்டின் தனிநிலையையும் பொதுநிலையையும் ஒரு தலையாகப் பிரித்துப் பார்க்கின்ற தவற்றைச் செய்யாமல் தவிர்ப்பது இன்றியமையாதது. இந்தப் பார்வையுடன் தமிழகத்தின் அண்மைக்காலப் பண்பாட்டு வளர்ச்சியை பார்ப்பது நல்லது. (தொடரும்)

அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள், கட்டாயம் **காரி, ஞாயிறு** ஆகிய நாட்களில் மாலையில் வரும்படி கேட்டுக்கொள்கிறோம்

—**அமைச்சர்.**

மறப்பேனோ?

— கல்லல்.

அகர முதலாகி னகரம்வரை தொடர்ந்து
நகராப் பேரின்பம் நல்கும் தனித்தமிழை
தகர்க்க நினைப்போரின் தலையைச் சீவுதற்கு
மகனை அணிவகுக்கும் மறவனையான் மறப்பேனோ!

உரையாலும் பாட்டாலும் உணர்வுகளை விழுங்குகின்ற
குறையில்லாச் செந்தமிழைக் குவலயத்தின் முழுமுதலைச்
சிறைக்குள் இட்டாலும் சிறப்பாக வளர்க்காத
அறைகுறைப் பிறவிகட்கே ஆண்மைதரா துறங்குவமோ?

கூத்தாலும் இசையாலும் குருதிக்குள் தேன்பாய்ச்சும்
மாத்தமிழை மாநிலத்து மாந்தர் சுவையமுதைத்
தூற்றும் கழுதைகளின் தோலுரித்துப் பறைகட்டி
ஏற்றமிகு தமிழ்மண்ணில் இசையமைக்கா துறங்குவமோ?

உடன்பிறந்தே உடன்வளர்ந்தே ஒண்தமிழ்த்தாய் மகவாகித்
தடமாறிப் போனவரின் தலைகளுக்கும் மொட்டையிட்டு
இடமின்றி அலகுகுத்தி எருக்கம்பூ மாலையிட்டு
அடலேறு பின்தொடர அணிவகுத்தால் தடுக்குவமோ?

நினைவுக்குள் ஒருகோடி நிலவாய்ச் சுவைக்கின்ற
எனையாளும் செந்தமிழின் ஏற்றம் சிதைக்கின்ற
வினைகழுதைக் கூட்டத்தின் விலாஎலும்பை யெடுத்தே
கனைக்கும் தோல்கருவி களிக்க முழங்கேமோ?

நெஞ்சுக்குள் தென்றலினை நினைக்கின்ற போதெல்லாம்
கொஞ்சமும் தயங்காமல் கொண்டுவரும் கற்கண்டை
அஞ்சாமல் அழிவுசெய்யும் அழும்பர் எலும்பெடுத்து
விஞ்சும் சோறுக்க விறகாய் எரிக்கோமோ?

'தமிழ் நிலம்'

உ. த. மு. க. கிழமை இதழ்— சென்னை-5

1. தனியிதழ் — விலை உரு. 0. 65
2. ஆண்டுக் கட்டணம் — உரு. 36. 00
3. அரையாண்டுக் கட்டணம் — உரு. 18. 00

ஓரிதழுக்கு உரு. 4.00 மேனி முன்பணம் கட்டும் முகவர்கள் எழுதிக் கேட்க.

தொடர்புக்கு : **தமிழ் நிலம்,** 5, அருணாசலத்தெரு, சென்னை-5.

அறப் பா[ர்]வை

— பேரின்பன்

முன்னுரை:

(அறப் பாவையா? அறப் பார்வையா?
இவற்றில் எது சரி? இரண்டும் சரியே!
ஆம்! "அறப்பாவையின் பார்வையே, அறப் பார்வை.
"புனைவுகளைக் காட்டிலும், உண்மைகள் மெத்தச் சுவையானவை; மிகுபயன் விளைவிப்பவை" என்கிறார், ஓர் ஆங்கில அறிஞர்.

இற்றைய நடைமுறை நிகழ்ச்சிகள் மூலம், நாளைய நம் செயல்களுக்கு வழிவகை செய்வது. இந்தப் பகுதி. இதன் நோக்கம், நையாண்டித் தாக்குதல் (Satire) அன்று. 'நடுவுநிலைமை' அணுகு முறையுடன், குமுகாயக் கேடுகளைக் களைய முனைவதே. இக் குணங்குறை தேர்வுக் கட்டுரைகளின் உட் கருத்து. திங்கள் ஒரு முறை இடம் பெறும்.)

1. இந்தி[ய]க் குடியரசு!

குமரி முதல் இமயம் வரை, நாடு தழுவிய **"இந்தி மொழிப் பெருவிழா"** கடந்த செப்தம்பர் திங்கள் 14-ஆம் நாள் கொண்டாடப் பெற்றது. அப்போது, **'குடியரசு'** என்பதற்குரிய புதியதொரு விளக்கமும் தரப்பெற்றது.

வேம்பாய் நகரில் நடைபெற்ற விழாவில் "சட்டங்களையும் சட்ட முறைகளையும் ஆட்சி மொழியான இந்தியிலேயே எண்ணி, எழுதிப் புரிந்து, பரப்பும்போதுதான், இந்தியா ஒரு **மெய்யான குடியரசு நாடாகத்** திகழ முடியும்," என்ற புதிய விளக்கத்தைப் வேம்பாய் உயர்நெறிமன்ற நயனரசர் திரு. **சந்திரசேகர் தர்மாதிகாரி** அவர்கள், வெளியிட்டுள்ளார்.

ஏனோ ஒரு பேருண்மையை அவரால் மறைக்க முடியவில்லை.
"சென்ற முப்பத்தைந்து ஆண்டுக்காலமாக இந்தியைப் போற்றி வளப்படுத்தியும் கூட, இன்னும் அம்மொழி, **தேசிய மொழியாக** (National Language) ஆக முடியவில்லை; வெறும் மொழி பெயர்ப்பு மொழியாகவே (A Language of Translation) இந்தி இயங்கி வருகிறது;" அவர் பேச்சின் மறுபகுதியில் இந்த அவலம் சொட்டுகிறது.

எழுநூறு கோடி உருவாக்களுக்கு மேல் செலவழித்தும் பலமொழி களிலிருந்து பல்லாயிரக் கணக்கான சொற்களை இந்தியில் மொழி பெயர்த்தும்—முழுத் தேசிய மொழியாக வளர முடியாத இந்தி, இனி எப்போது 'மெய்யான இந்தி(ய)க் குடியரசை' நிறுவப்போகிறதோ, தெரியவில்லை. ஒருகால், தற்போதைய இந்தியா, குடியரசு நாடாக இயங்கவில்லையோ, என்னவோ? – பாவையின் ஐயம் இது.

நடுவணரசின் கப்பல், போக்குவரத்துத் துறை அமைச்சர், மாண்புமிகு **சி. எம். இசு. டீபன்,** கேரளத்தைச் சார்ந்தவர், இந்தி

பேசா மாநிலத்தவர். இந்தியாவை மெய்யான இந்தி(ய)க் குடியர சாக' ஆக்கும் ஓர் உறுதிமொழியை அவர் அண்மையில் வழங்கி யுள்ளார். கொச்சி 'இந்தி சலாகார் சமிதியில்' பேசும்போது, "என்னுடைய அமைச்சகத்துறையில் இந்திப் பரப்பீட்டைச் சற்றும் தளராது, தீவிரமாகத் தொடர்ந்து செயற்படுத்துவேன்" என்பதே அவருடைய வீர உறுதிமொழி!

பாவைக்கு மீண்டும் ஓர் ஐயம். 'இந்தியைத்திணிக்க மாட்டோம்' என மாண்புமிகு தலைமையமைச்சர் அவர்களும் நடுவணரசு அமைச்சர் களும் திருப்பத் திரும்ப உறுதி மொழிகளைத் தந்த வண்ணமுள்ளனர்.

இவற்றில் எது மெய்யான 'உறுதிமொழி'? மாண்புமிகு இந்திரா காந்தி அவர்கள், "தென்னிந்திய இந்திப் பரப்பீட்டுப் பேரவை" (தட்சிணப் பாரத் இந்தி பிரச்சார சபா)யின் தலைவராகவும்; வெளி நாட்டு அமைச்சர் மாண்புமிகு பி.வி. நரசிம்மராவ் அவர்கள் அதன் முதல் துணைத்தலைவராகவும் போட்டியின்றி ஒரு முகமாக அண்மை யில் தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ளனர். இவர்கள் பதவிக்காலம் 3 ஆண்டு கள். நடுவண் அமைச்சரவை வேறு; இந்திப் பரப்பீட்டுப் பேரவை (பிரச்சார சபா) வேறு; என்பது இப்போது ஐயமின்றித் தெளிவாகி விட்டது. அதைப் போலவே, 'உறுதிமொழி' என்பதற்கும் இனி சரியான பொருளைப் புரிந்து கொள்வோமாக.

ஆறுவது அனைத்திந்திய தேவநாகரி இலிபி (சமற்கிருத எழுத்து வடிவம்) மாநாடு, சென்ற ஆகச்டு திங்களில் சீரும் சிறப்புமாகத் தில்லியில் நடைபெற்றது. "இந்திய நாட்டின் ஒற்றுமைக்கும் நலனுக்கும் வழியமைக்க இனி தேவநாகரி இலிபியையே (எல்லா இந்தியமொழிகளுக்குரிய) இணைப்பு இலிபியாக ஆக்க வேண்டும்; அந்த இலிபியை அனைத்திந்திய மட்டத்திலும் பரப்பவேண்டும்" என்ற 'ஒருமைப்பாட்டுத் தீர்மானத்தை' அம் மாநாடு ஒரு முகமாக நிறைவேற்றியுள்ளது.

1652 தாய்மொழிகள் இந்தியாவில் உள்ளன; அவை 827 மொழி வகைகளைக் கொண்டவை. அரசமைப்பால் ஏற்கப்பட்ட 15 தேசிய மொழிகளும், அவற்றுள்ளடங்கும் எனப் பாவை கூறவில்லை; இந்திய மக்கட் கணிப்பு (Census) பேசுகிறது. அம்மொழிகளின் தனித் தன்மைகள், அதனதன் தனித்தனி எழுத்து வடிவங்களால்தான் நிலைத்து நிற்கின்றன எனக் கூறுகின்றனர், மொழி வல்லுநர்கள். ஆனால் தேவநாகரி மாநாட்டினரோ அவற்றால் இந்திய ஒற்றுமை சிதறுண்டு போகிறது எனக் கருதுகின்றனர் போலும்.

இனி அனைத்து மொழிகளுக்கும் ஒரே இலிபிதான்; ஒரே இலிபியில் தான் அனைத்து மொழிகளும் எழுதப்படும். அந்த இலிபி எந்த, இலிபி? தேவநாகரி இலிபி-அதாவது சமற்கிருத இலிபி,

இந்தி ஆட்சிமொழி-அஃதாவது இணைப்புமொழி எனவே இந்தி இலிபியும், இணைப்பு இலிபியாவது நயமைதானே!

இந்தி இலிபி வேண்டாமென்றால் இந்தியும் வேண்டாமென்றாகி விடுமல்லவா? அத்தகையோர் தேசியத்தின் எதிரிகள்- குறுகிய வட்டார—மொழி—வெறியினர். இந்தி இலிபி வேண்டுமென்போர் இந்திமொழி வெறியினர் அல்லர்! மெய்யான தேசியக் கருத்தினர்.

தேசியம் பற்றிப் பாவைக்கு ஓர் ஐயம்.

15 தேசிய மொழிகளில் மராத்தியும் ஒன்று. **மராத்தி மொழிக்கும் இந்தி மொழிக்கும் இலிபி ஒன்றுதான்** தேவநாகரி இலிபி—அஃதாவது 'இணைப்பு இலிபி'. மராத்தியர்கள், தமிழர்களைப் போன்றவர்களல்லர்; தீவிரமாக இந்தியைக் கற்பவர்கள். ஆட்சிமொழியாயிற்றே!

ஆனால் இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் பலர் பல தலைமுறைகளாக மராத்தியத்தில் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் ஏனோ மராத்தியைக் கற்பதில்லை. இணைப்பு இலிபி என்னவாயிற்று? இந்திக்காரர்களுக்கு மட்டும் மராத்தி படிக்க இந்தி இலிபி பொருந்தாதோ.

''நாக்பூரில் இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் பல தலைமுறைகளாக வாழ்ந்து வந்தும் மராத்தி மொழியைக் கற்கவில்லையே? அந்தோ!'' என நடுவண் அமைச்சர் மாண்புமிகு வி.பி. சாத்தே போபாலில் ஒரு விழாவில் பேசும்போது (12-7-80) வருந்தினாராம்.

தேவநாகரி இலிபியால் அனைத்திந்திய ஒற்றுமையைப் பெற முடியுமா? அல்லது அனைத்து மொழிகளின் அழிவுக்கும் இணைப்பு இலிபி, காரணமாக அமையுமா?

சரி, இலிபி ஒருபுறம் இருக்கட்டும், தாய்மொழிக்கு வருவோம்.

"அனைத்திந்தியாவுக்கு மட்டுமன்று. அனைத்துலகிற்கும் பொருந்தக்கூடிய ஒரு பொதுஇலிபி தேவை. ஆயிரக் கணக்கான மொழிகளினால் என்னபயன்? மொழி என்பது மாந்தனின் எண்ணங்களை வெளிப்படுத்துகின்ற வெறும் ஒரு கருவி தானே. எனவே ஒரேமொழி, ஒரே இலிபி, உலகிற்குப் போதும்." இஃது, உலகத் தேசியம் பேசும் சில தீவிரப் பொதுவுடைமையாளர்களின் சிந்தனையோட்டம்.

'வளர்ந்து வரும் நாட்டின் விழிப்புணர்ச்சி. (National Awakening) முழுக்க முழுக்க தாய்மொழியின் அடிப்படையிலேயே உருவாகி வளர்கிறது' என நமது தலைமுறையின் பெரும் சிந்தனையாளர்களில் ஒருவரான பேராசிரியர் ஏ.சே. டாயின்பி (Prof. A.J. Toynbee) கருதுகிறார். மார்க்கியத்தை ஏற்றுக் கொண்டவர்களில் அவரும் ஒருவர்.

அரசியல், பொருளியல், குமுகவியல் சமன்மையோடு உலக மக்கள் அனைவரையும், 'ஒரேவிலை ஒரே நிறை'யோடு உருவாக்கி உலக நாடுகளையெல்லாம் ஒரு கூட்டாட்சியின் கீழ் அமைக்க அயராது பணியாற்றி வரும் நிறுவனம் **'அனைத்து நாட்டுக் கல்லி, குமுகாய, பண்பாட்டுக் கழகம்'** (UNESCO). பல நாடுகளின் மொழி வல்லுநர்களைக் கூட்டி, நெடுங்காலம் ஆய்வுசெய்து, தாய்மொழி பற்றிய சில அடிப்படைக் கொள்கைகள், அக்கழகம் 1953-இல் வெளியிட்டது. அதன் வழி உலக ஒற்றுமைக்கும் வழி காட்டியது.

"ஒரு குழந்தைக்குக் கல்வி கற்பிக்கும் சிறந்த பயிற்றுமொழி, அதன் தாய்மொழியே. உளவியல்படி, பொருள்களை உணரவும் தெளிவாக அறியவும் சொல்லால் வெளிப்படுத்தவும் தேவையான பொருள் பொதிந்த பல குறியீடுகளை அக்குழந்தையின் மூளையில், தானே இயங்க வைப்பது அதன் தாய்மொழிதான். குமுகாயவியல்படி தான் சார்ந்துள்ள இனத்தின் உறுப்பினர்களுள் ஒருவராக அக்குழந்தையைப் புலனறிய வைப்பதற்கு வழிவகை செய்வதும் அதன் தாய்மொழிதான். கல்வித் துறையிலோ அக்தழந்தை புரியாததோர் வேறுமொழி மூலமாகக் கற்பதைக் காட்டிலும், தாய்மொழி மூலமாக அதிவிரைவில் கல்வி கற்றுக் கொள்கிறது". (UNESCO 53).

உளவியல், குமுகாயவியல், கல்வித்துறை ஆகியவற்றிற்கு அடிப்படையானது, தாய்மொழிப் பயிற்சி. வளர்ந்த பின்னர் மொழித் தேசியத்தின் மூலமாக உலக ஒற்றுமையைக் காணமுடியும் எனத் தெளிவாக்குகிறது உலகக் கழகம்.

'இலிபி' மாறினால் மொழிதிரியும், மொழிதிரிந்தால் இனம் (Nationality) அழியும், நாடும் அழியும்.

இந்தியத் துணைக் கண்டம் பன்மொழித் தேசிய இன மக்களைக் கொண்டது என்கின்றனர். ஒரே பொதுமொழியால் ஒரே பொது இலிபியால்—பல மொழியினங்கள், கால வட்டத்தில் மறைந்து போகும். அனைவரும் **'இந்தி'யா** ஆகிவிடுவர். அதற்குப் பெயர் தான் **"இந்திய ஒற்றுமை"** போலும்! அதில் மலர்வதுதான் **மெய்யான 'இந்தி(ய)க்குடியரசு'** போலும்! **வாழ்க, இந்தி(ய)க்குடியரசு!!**

"தென்மொழி"

சென்னை-௫.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம் :	15 உருபா	35 உருபா	35 உருபா
அரையாண்டுக் கட்டணம் :	௮ ,,	18 ,,	18 ,,
தனியிதழ் :	1.25 ,,	3 ,,	3 ,,

ஓரிதழுக்கு உருபா 2-50 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதி கேட்க!

தோற்றுவிப்போம்;
வெற்றி காண்போம்!

— பாவலர் **உலைனல்**

கங்கைவரை படையெடுத்தோம், வெற்றி கண்டோம்;
    கடாரத்தை முறியடித்தோம்; திரும்பத் தந்தோம்!
சிங்களரைத் தெற்குநோக்கி ஓட வைத்தோம்!
    செந்தமிழர் பரம்பரையைத் தோற்று வித்தோம்!
வெங்கொடுமை ஆரியரைத் தாக்கி அங்கே
    வெற்றிக்கொடி பறக்கவிட்டோம்! இன்றோ இங்கே
பங்காளிச் சண்டைகளால் நமக்குள் நாமே
    பாய்நாய்கள் போல்கடித்துப் பகைத்துக் கொண்டோம்!

முதல்மொழியைத் தோற்றுவித்தோம்; மாந்தன் கூட
    முழுமையுற்றான் தமிழ்நிலத்தில் என்று கூறும்
சிதறடிக்கும் பேச்சுகளால் பயனென் கண்டோம்?
    செந்தமிழர் ஒற்றுமைக்கு வழிகண் டோமா?
எதனாலும் தமிழர்க்குள் பிரிவி னைகள்
    இல்லாமல் இருக்கின்ற தமிழ்நி லத்தை
இதுவரைக்கும் தோற்றுவிக்க வழிகள் தேடி
    எப்பணிகள் நாம்செய்தோம்? இதனால் தாழ்ந்தோம்.

இனவுணர்வு இல்லாத தமிழர் இங்கே
    இருக்கும்வரை முன்னேற்றம தமிழுக் கில்லை.
எனஎண்ணும் தமிழர்களை இணைத்து வைத்தே
    இவ்வுலகில் **'தமிழ்நிலத்'**தைப் புதுக்கா விட்டால்
உணவுக்கும் வழியின்றி இரந்து கேட்கும்
    ஓர்நிலைமை உண்டாகும். தமிழர்க் கிங்கே
கணக்கற்ற பிரிவினைகள் தமிழர்க் குள்ளே
    காணும்வரை தனித்தமிழின் நலஞ்சா காதா?

உலகத்துத் தமிழர்களை ஒன்று கூட்டும்
    உயர்பணியில் இயங்கவரும் **'தமிழ்நி ல'**த்தை
உலகெங்கும் பரப்பிடுவோம்! தமிழுக் காக
    உயிர்நல்கும் படைஅமைப்போம்! பணத்திற் காகப்
பலர்தமிழர் வாழ்வழித்து வாழு கின்ற
    பாழ்தலைவர் சாவதற்குத் தொண்டு செய்வோம்!
சிலநாட்கள் வாழ்ந்தாலும் தமிழர்க் காகச்
    செயல்படுவோம்! **'தமிழ்நிலத்'**தைத் தோற்று விப்போம்!

நான் கண்ட பேய்!

— நன்னன்.

மீன மாதத்தின் ஒரு மாலைப்பொழுது. கதிரவன் மேல்மலையின் உச்சியில் ஒருக்களித்திருந்த நேரம். ஆடுகளுக்கும் மாடுகளுக்கும் இடையில் வேலைக்கு வந்திருந்த மாந்தர்களும் பெரும்பாதையின் கிழக்கில் கடுகிக் கொண்டிருந்தனர். எள் களத்திலிருந்த எனக்கும், என் தாயாருக்கும் 'எங்களுக்கு உணவுவருகின்றதா' எனப்பார்த்துப் பார்த்துக் கண்கள் பூத்து விட்டன. பொழுது மறையும் வரையிலும் உணவு வந்தபாடில்லை. வேறு வழியின்றி என் அம்மா களத்துக்குக் காவலாக இருக்கவும், நான் உணவு வாங்கி வர வீட்டுக்கு வரவும் தீர்மானித்தோம். இதற்குள் சூரியன் மறைந்து வெறும் வெளிச்சம் மட்டும் வந்து கொண்டிருந்தது.

எனக்கு அப்பொழுது அகவை பத்து. அரைக் காற்சட்டை அணிந்திருந்தேன். காற்சட்டையின் இரண்டு பைகளிலும் எள் இருந்தது. நன்ருகக் காய்ந்த அரிஎள் அது. எள்ளை அள்ளி வாயிற் போட்டுத் தின்று கொண்டே பெரும்பாதையில் ஓடலானேன். ஆட்களையும், ஆடுகளையும், மாடுகளையும் கடந்து ஓடிக்கொண்டிருந் தேன். சடையாலை நெருங்குகையில் மயங்கிய நேரம் ஆகிவிட்டது. சடையாலில் இருப்பதோ பெரும் சடைமுனி. என் சட்டையின் பை களிலும், கையிலும், வாயிலும் இருந்ததோ எள். இருட்டிக்கொண்டி ருந்த நேரம். நேருக்கு நேர் பார்த்த பொழுது எனக்குப் பொலோர் என்று மயிர்க்கால்கள் எல்லாம் குத்திட்டு நின்றன. ஆனால், நான் நிற்கவில்லை. ஆட்களையும், கால் நடைகளையும் விலக்கி விலக்கி ஓடிக் கொண்டிருந்தேன்.

குப்பான் குளத்தின் ஆலமரத்தின் அடியில் தின்பண்டங்கள் விற்றுக் கொண்டிருந்த கூடைக் கடைக்காரர்களின் முகந்தெரியாத அளவுக்கு இருட்டிவிட்டது. வேகத்தைக் கூட்டி ஓட்டமிட்டேன். இருட்டோடு புழுதித்தூசி வேறு சேர்ந்துகொண்டது. வெளிச்சங் குறைந்துவிட்டது. நல்ல காற்றையும் உயிர்க்க முடியாதிருந்தது. சிறுகுளத்தைக் கடந்து சீவகனேரியின் ஊடே வடக்காக நடக்க லானேன்.

சீவகனேரியில் பொன்னுன்மத்தஞ் செடிகள் காடாய் மண்டிக் கிடந்தன. அவற்றினிடையில் ஓட முடியவில்லை; நடந்தேன். ஆனால், வேகமாக நடந்தேன். என்னுடன் வேறு யாரும் வரவில்லை. கால் நடைகள் கூட இல்லை. குளம் நீரின்றிக் காய்ந்திருந்து, தரை விரி வோடிக்கிடந்தது. இப்பொழுது நன்ருக இருட்டிவிட்டது. வானத் தின் எந்த மூலையிலும் நிலவை நான் பார்க்கவில்லை. காருவா இருட்டுப் போலிருந்தது. வெள்ளிகள், துலை மாதக் காலைக்கதி

ரொளியில் தெரியும் அம்புக் காளான்களைப் போல் வெள்ளை வெளே ரெனக் கூட்டங் கூட்டமாய்த் தெரிந்தன. அவை ஓரளவு வெளிச்சந் தந்தன. என் காலடி ஓசை கேட்டுக் கத்திக் கொண்டிருந்த கரும் பாச்சைகள் அங்கங்கே தம் ஒலியை நிறுத்தின; பின் தொடர்ந்தன. கிழக்கில் தொலைவில் ஏறத்தாழ ஓர் அயிரமாத்திரியில் உள்ள கம்வாயின் (கண்மாயின்) கிழக்குக் கரையில் தடக்புடக்கென்று கட்டை வண்டி ஒன்று சென்றதை உணர்ந்தேன். வண்டிக்காரன் பாடிய பாட்டும் தெளிவற்றுக் கேட்டது. மேற்கில் நரிகள் ஊளை யிட்டன. எங்கிருந்தோ சில நாய்கள் குரைத்தன; கிடையிலிருந்த ஆடுகளும், மாடுகளுங் கத்தின. கம்வாய்க் கரையிலுள்ள மருத மரங்கள் ஆடாமல் அசையாமல் கரும்பூதங்கள் போன்று நின்று கொண்டிருந்தன. எலிகள் கீச்சிட்டு ஓடின. ஆந்தைகள் தொலை விலுள்ள மரங்களிலிருந்து அலறின. உன்மத்தஞ்செடிகளினிடையி லிருந்து கூகைகள் மாறி மாறி 'உம்...உம்' என்று அச்சுறுத் தின. என் மேலெல்லாம் புல்லரித்தது; தெப்பமாய் நனைந்து விட்டது வெயர்வையில். நெஞ்சு படபடக்க நடையை எட்டிப் போட்டேன். கம்வாயின் வடக்குக் கரையை நெருங்கிவிட்டேன். அதை ஒட்டிினாற்போல் கம்வாய்க்கு நீர்வரத்துக்கென ஒரு கால்வாய் இருக்கின்றது. அதன் தெற்குக் கரையை நெருங்கும்பொழுது, கம்வாயின் வடக்குக் கரையில் ஒரு நெருப்புத்துண்டு தெரிந்தது. அந்த நெருப்புத்துண்டம் சற்றுக் கிழக்கில் சென்று கழிங்கின் ஓரம் மறைந்தது. பின் மீண்டும் மேற்கு நோக்கி வந்தது. நான், நீரின்றி ருந்த கால்வாயில் இறங்கி ஏறி, கம்வாயின் வடக்குக்கரையில் ஏறி னல் அப்புறமுள்ள எங்களின் இறைவைக்காட்டை அடைந்து, என் தந்தையாரிடம் சொல்லி அம்மாவுக்கு உணவு ஏற்பாடு செய்ய லாம். காலவாயில் இறங்குவதற்கு அணியமாய் இறங்கு பாதையின் விளிம்பில் நின்றிருந்தேன். ஆனால் இப்பொழுது நெருப்புத் துண்டம் வேகமாக அங்குமிங்கும் ஓடியது. கொள்ளிவாய்ப்பேய் அக்கரையில் ஆட்டமிட என் உடலெல்லாம் ஆடிக் கொண்டிருந்தது. உற்றுக் கவனித்தேன். கொள்ளிவாய்ப்பேயுடன் ஒரு வெள்ளைநிற மாட்டுப்பேயும் சேர்ந்து ஆடியது. அவற்றுக்குக் கொண்டாட்டம்; எனக்கோ திண்டாட்டம், செய்வதறியாது நின்றிருந்தேன். அப் பொழுது கொள்ளிவாய்ப்பேய் 'ஓ'வெனக் கத்தச் சற்றும் எதிர்பாராத வண்ணம் மாட்டுப்பேய்க் கரையிலிருந்து தெற்காக என்னை நோக்கி வேகமாக இறங்கி ஓடிவந்தது. வந்த வேகத்தில் என்னை மோதித் தள்ளிவிட்டது. நான் 'அம்மா'வென அலறி வீழ்ந்தேன்.

வீழ்ந்த என்னை ஒரு பேய் தூக்கியது; தோளில் போட்டுக் கொண்டது. நடந்து பெருங்காட்டிடைச் சென்றது. வழிநெடுகிலும் பூதங்களிருந்து வாழ்த்துக் கூறின. காட்டின் நடுவில் ஒருமலை இருந்தது. மலையின் வயிறு போன்றிருந்த பெரும்பாறையின் முன் சென்று நின்றது. ஒரு கையை நீட்டி 'கராங் கராங் கரக்'கென்றது.

இப்பொழுது பாறை விலகி விட்டது. ஒரு குகை தெரிந்தது. குகையின் இருபுறமும் தீப்பந்தங்கள் நடப்பட்டிருந்தன. பேய் என்னைச் சுமந்து கொண்டு குகைக்குள் நடந்தது. பந்தத்திற்கொன்றாக காவற் கரும்பேய்கள் நின்றிருந்தன. கொஞ்சத் தொலைவு சென்றதும் குறளைப்பேய்கள் நடனமாடித் தம் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டன. மேலுஞ் செல்கையில் பாம்புகள் குகையை நிறைத்தது போன்று தொங்கிக் கொண்டும், தொத்துப் பொத்தென்று விழுந்து கொண்டும், நெளிந்தோடிக் கொண்டுமிருந்தன. இன்னுஞ் சற்றுத் தள்ளிச் செல்கையில் தேளும், நட்டுவாய்க்காலியும், பூரானும், செய்யானும் குவியல் குவியலாய்ப் பின்னிக் கிடந்தன. அச்சத்துக்கு மேல் அச்சம்! இன்னும் சற்றுத் தள்ளிச் செல்கையில் மிக அதிகமான வெளிச்சந் தெரிந்தது. அவ் வெளிச்சத்தில் பெண் பேய்கள் கூட்டமாக நாட்டியமாடிக் கொண்டிருந்தன.

என்னைக் கூட்டத்தின் நடுவில் நிறுத்திவிட்டு, அந்தப் பேய் மேலும் உள்ளே சென்று விட்டது. பெண் பேய்கள் மிக மகிழ்ச்சியோடு என்னைச் சுற்றி ஆடின. சற்று நேரத்திற்கெல்லாம் குறளைப் பேய்களுஞ் சேர்ந்து கொண்டன. பந்தங்கட்குக் காவலிருந்த கரும்பேய்களும் பந்தங்களை ஏந்தி ஆடின. இப்பொழுது பேய்களுடன் பாம்புகளும் சேர்ந்து கொண்டன. ஆட்டம் உச்சக்கட்டத்திலிருக்கும் பொழுது, என்னைத் தூக்கிவந்த பேய் வந்து நின்று 'எய்யா......' என்றது. ஆட்டமெல்லாம் நின்றது. என்னைச் சுற்றியிருந்த பேய் வட்டமும் விலகி ஒதுங்கியது. நான் சமதளமான இடத்தில் நின்றிருந்தேன். அவ்விடம் விரிந்து ஒரு திடல் போன்றிருந்தது. திடலின் தென்புறம் புகைவந்தது. அதிலிருந்து ஒருவகை தீநாற்றம் வீசியது.

புகையினூடே அச்சந்தரும் ஒரு காட்சி தெரிந்தது. வெண்மை நிறத்தில் வட்டமான மேடை. மேடையின் ஓரத்தில் மாந்தரின் தலைகள். அவற்றிலிருந்து அரத்தஞ்சொட்டிக் கொண்டிருந்தது. புகை சிறிது குறைந்திருந்தது. வட்டமேடையின் நடுவில் ஓர் உருவந் தெரிந்தது. அதன் தோற்றம் அச்சந்தருவதாயும், வியப்பாயும், அருவருப்பாயுமிருந்தது. அதன் தலை குதிரையின் தலையாயிருந்தது; அரிமாவிற்கிருக்கும் பிடரிமயிர். வாயில் நீண்டிருந்த இரு மருப்புகள். காட்டெருமையின் கொம்புகள் தலையில். ஆந்தையின் கண்கள். எலியின் காதுகள். பூனையின் மீசை. நாயைப்போல் நாக்கைத் தொங்கப்போட்டிருந்தது. பொலிகாளையின தொத்த பெருந் திமில். திமிலை ஒட்டி வவ்வாலுக்கிருப்பதுபோல் இரு சவ் விறக்கைகள். கரட்டானுக்கிருப்பதுபோல் முப்பட்டையான உடல். அழுங்கின் (எறும்புதின்னி) ஓடுகள். மீனின் வால். ஆனால், ஒன்று. அதற்குக் கால்களோ, கைகளோ இல்லை!

புகை முற்றும் அற்றுவிட்டது. எங்கும் ஓரே அமைதி. சிறிதளவு ஓசையுங் கேட்கவில்லை. கண்ணெதிரே காண்பவை அசையுந்தன்மையுள்ள பேய்களா அல்லது குத்துக் கற்களா என எண்ணத் தோன்றிற்று. இப்படி எண்ணிக் கொண்டிருக்கையில் அந்த அமைதி குலையும் வகையில் அந்த உருவம் பேசியது. என்னைப் பார்த்து, 'இப்படி, வா' என்றது. எனக்குப் பெரும் வியப்பாயிருந்தது. அவ் உருவம் மாந்தரைப்போல் பேசியது. அதே நேரம் எனக்கு மயக்கமே வரும் போலிருந்தது. உடல் வெலவெலத்தது. என்னால் ஓரடிகூட எடுத்து வைக்க இயலவில்லை. மீண்டும் அதே குரல், 'இப்படி, வா' தன்னந்தனியனாய் நின்றிருந்த போதிலும் என் கண்கள் அவ்வுருவத்தை உற்றுப் பார்க்கத் தவறவில்லை. ஆம்; அவ்வுருவம் ஆடாமல் அசையாமல் படுத்தநிலையிலேயே கிடந்தது. அதால் ஒரு விரலுங் கூட நகரமுடியாது என்பதை உணர்ந்து கொண்டேன். எனக்குச் சிறிது துணிச்சல் வந்துவிட்டது. ஏளனமாக அதைப்பார்த்தபடி நின்றிருந்தேன். அது தன் கோரைப்பற்களை நற நறவென்று கடித்தது. பின் குகையே அதிரும்படியாக உரத்த குரலில், 'இப்படி, வா' என்றது. நான் அசையவே இல்லை. கோபங் கொண்ட அது 'ஆடு' என்றது. நான் மெல்லச்சிரித்தேன், நானாவது ஆடுவதாவது!

ஆனால், பேய்கள் எல்லாம் ஆடின. இடியென முழவும், முரசும் முழங்கின. பேரோசையாயிருந்தது. பேய்கள் இப்பொழுது எலும்புகளையும், மண்டையோடுகளையும் மாலைகளாகப் போட்டிருந்தன. வாய்களிலிருந்து அரத்தம் வடிந்தவாறிருந்தது. அவை 'ஆய்..... ஊய்....' என்னும் ஓசையிரைச்சலுடன் ஆடின. ஆடின என்பதினும் கண்டவாறு ஒழுங்கின்றிக் குதித்துக் கும்மாளமிட்டன என்பதே பொருத்தம்.

இந்த ஆர்ப்பாட்டங்களுக்கெல்லாம் நான் மசியவில்லை. அந்தப் பேரிசைச்சலையும் மீறி ஒரு குரல்: 'நிறுத்து, ஆட்டத்தை' என்று. என்னவென்று சமநிலைக்கு வருமுன்னர்மீண்டும் இடிபோசையில், 'வெட்டு' என்னும் கட்டளை பிறந்தது. அவ்வசையா உருவத்திடமிருந்து. உடனே ஒருபெரும் பூதம் பெரிய கருக்கரிவாள் ஒன்றைத் தோளில் சாய்த்துப் பிடித்தவண்ணம் என்னை நோக்கி வந்தது. என் பதின் நாடிகளும் ஒடுங்கின. குருதி ஓட்டமே நின்றுவிட்டது போல் ஆயிற்று. பூதம் அருகில் வந்து அரிவாளை ஓங்கியது. என் பலத்தையெல்லாங் கூட்டி 'அம்மா' என்று அலறினேன். என்ன வியப்பு! பேய்களையும், அசையா அருவருப்பு உருவத்தையும் ஏன் குகையையுங்கூடக் காணோம். எல்லாம் மாயமாய் மறைந்துவிட்டன. ஆனால், நான் ஒரு காளிகோவிலின் முன்நின்று கொண்டிருந்தேன். கோயிலின் வாயிலில் சிலையின் மிக அருகில் பூசகன் உடுக்கை அடித்துக் கொண்டிருந்தான். நான் நன்றிப்பெருக்கால் 'அம்மா...,அம்மா' என்று என் இரு கைகளையும் தலைக்குமேல் தூக்கி வணங்கினேன்.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

குணவீரரின் நேமிநாதம்

— புலவர். **தி. நா. அறிவுஒளி**, க' மு; கல்.இ.

ஒருதொடர், நிலைமொழி வருமொழிகளையுடையதாம். இவற்றின் **பொருள்முடிபு நான்குவகைகளில்** அமையும்.

1) முன்சொல்லில் பொருள் நிற்றல்.
(எ-டு) **கால்** காசு — முன்மொழியில் பொருள் நிற்கிறது.

2) பின் சொல்லில் பொருளிருத்தல்.
(எ-டு) முல்லைப் **பூ**—பின்மொழியில் பொருள் நிற்கிறது.

3) இருமொழியிலும் பொருள் கிடத்தல்
(எ-டு) கபிலபரணர் — இருமொழியிலும் பொருளிருக்கிறது.
(இலக்கணத்தில் உம்மைத் தொகை எனப்படும் சொல்)

4) இருமொழியும் ஒழிய வேறொருமொழியில் பொருள் நிற்றல்
(எ-டு) ஒளியிலை௶ — இருமொழியிலும் பொருள் நில்லாமல் இவற்றை யணிந்த பெண் என்று வேறொரு (தோன்ருத) மொழியில் பொருள் நிற்கிறது. (இதை 'அன்மொழித் தொகை' என இலக்கணங்குறிக்கும்)

'பொருள் நிலை' முறைகளையும் குணவீரர் செறித்துணர்த்திய திறம் பாராட்டற் பாலதாகும்.

தொல்காப்பியம், நன்னூல், முத்துவீரியம், இலக்கண விளக்கம். வீரசோழியம் முதலிய இலக்கணநூல்கள் இடைநிலை மெய்ம்மயக்கம் பற்றி விரிவாக நூற்பாக்களை வகுத்துள்ளன.

(முன் பக்கத் தொடர்ச்சி)

அப்பொழுது என்மேல் ஒரு கை விழுந்தது. திரும்பிப்பார்த்தேன். ஆம், பார்த்தேன். திரும்பியன்று; ஏறிட்டு விழித்துப்பார்த்தேன். நான் படுக்கையில் படுத்திருந்தேன். என் அருகில் என் பெற்றேரும் உற்றேரும் நின்றிருந்தனர். என் அப்பா என் கண்களைத் துடைத்தவாறிருந்தார். எங்களுடைய வீட்டின் முன்புறம் உடுக்கை அடித்துக் குறிபார்த்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது என் அப்பா சொன்னர், ''பையல் மிகவும் அச்சமடைந்து விட்டான். நான் விரட்டிய மாடு இவனை மோத, அலறி விழுந்தவன் இரண்டுநாளாயிற்றே கண்விழிக்க! எல்லாம் பெரியகருப்பையா அருள்! காற்றுக் கருப்பெல்லாம் விலகி என் பிள்ளை பிழைத்துக் கொண்டான்' என்று கண்களில் நீர் மல்க நாத்தழுதழுக்கக் கூறினர்.

அட, நான் கண்டதெல்லாங் கனவா? நான் கண்ட பேயெல்லாம் சுருட்டுப்பிடித்தவாறு, தோட்டமேயவந்த திருட்டு மாட்டை விரட்டிய என் தந்தையும், அந்தத் திருட்டுமாடும்தாமா? அவற்றேடு என் கலங்கிய மனங்கண்ட கனவு உருவங்களும், அரைகுறையாய் மயக்கத்திலிருந்த என் செவிகளிற்பட்ட உடுக்கோசையுந்தாம் பேய்களும் பேயாட்டமும் ஆயிற்ரு? உண்மையிற் பேயே இல்லையா?

ஆனால், நேமிநாதமும் தொன்னூல் விளக்கமும் மெய்ம்மயக்கம் பற்றி ஏதும் மொழியவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும். ஒருவகையில் இஃது இந் நூலில் ஒரு குறைபாடேயாகும் எனலாம்.

உடம்படுமெய் தமிழின் சிறப்பான புணர்ச்சிநெறி என அறிஞர் போற்றுவர். தொல்காப்பியத்தில்,

"எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே
உடம்படு மெய்யின் உருபுகொளல் வரையார்"

(தொல்: 141)

என ஓரளவு வரையறை கூறப்பட்டுள்ளது. ஆனால் தெள்ளத் தெளிந்த திட்டவட்டமான விளக்கமில்லை. எவ்வெவ்வுயிர் முன் எவ்வெம் மெய்வரும் எனத்தொல்காப்பியர் வரையறை கூறவில்லை. நேமிநாதமும் வீரசோழியமும் நன்னூலும் அந் நெறியை உணர்த்து கின்றன.

குணவீரர் வீரசோழியத்தை அடியொற்றித் தம் வெண்பாவை அமைத்துள்ளார் எனலாம்.

"மூன்றுநான்(கு) ஒன்பான் உயிர்ப்பின்னும் அல்லாத
ஆன்ற உயிர்ப்பின்னும் ஆவிவரின்—தோன்றும்
யகர வகர இறுதியிடத் தோரார்
மகரங் கெடவகரம் ஆம்." (நேமி : 13)

இப் பாடலோடு வீரசோழிய நூற்பாவை ஒப்புநோக்கினுல் உண்மை புலனும் :

"மூன்றோடு நான்கு ஒன்பதாம் உயிர் பின்னுயிர் முந்தின்நடு
ஆன்றைய காரம் வந்தாகம மாகும்; அல்லா உயிருக்கு
ஏன்றவ காரம்; எட்டு ஏற்கும் இரண்டும் இறுதிகெட்டுத்
தோன்று நிலையும் ஓரோவிடத்தா மென்பார் தூமொழியே.

(வீர சோழியம்: 13)

நன்னூல் நூற்பா ஏனையவற்றின் தெளிவும் விளக்கமும் அமைய வரையறுக்கிறது :

"இ ஈ ஐ வழி யவ்வும் ஏனை
உயிர்வழி வவ்வும் ஏமுன் இவ்விருமையும்
உயிர்வரின் உடம்படு மெய்யென்றாகும்" (நன்:162)

உயிரீறு, மெய்யீறு எண்ணுப் பெயர் முடிபுகளைப் பிற வெண் பாக்களில் குணவீரர் விளக்குகிறார்.

சொல்லதிகாரம்: சொல்லதிகாரம் 9 உட் பிரிவுகளை உடையது.

1.	மொழியாக்கம் மரபு	:	14 வெண்பாக்கள்
2.	வேற்றுமை மரபு	:	5 ,,
3.	உருபு மயங்கியல்	:	3 ,,

4. விளிமரபு : 6 வெண்பாக்கள்
5. பெயர் மரபு : 9 ,,
6. வினைமரபு : 12 ,,
7. இடைச் சொல் மரபு : 5 ,,
8. உரிச் சொல் மரபு : 5 ,,
9. எச்ச மரபு : 11 ,,

சொல்பற்றி விளக்க வந்த ஆசிரியர், உயர்திணை அஃறிணை என இரண்டும், அவ்விரு திணையிடத்தும் ஆண்பால் பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என ஐந்து பால்களும் திணைவழு, பால்வழு, மரபுவழு, வினாவிழா, செப்புவழு, காலவழு, இடவழு என ஏழுவகை வழுக்களும் ஒன்று முதலாக விளிமுடிய எட்டு வேற்றுமைகளும், வேற்றுமைத் தொகை, உம்மைத் தொகை, பண்புத் தொகை, உவமைத் தொகை, அன்மொழித் தொகையென ஆறுவகைத் தொகையும், தன்மை— முன்னிலை— படர்க்கையென மூன்று இடமும், இறப்பு – நிகழ்வு – எதிர்வு என முக்காலமும், வழக்கு, செய்யுள் என ஈரிடமும் என எட்டுப் பகுதிகளாகப் பகுத்து ஆராய்கிறார்.

முடிவுரை : 'சுருங்கச் சொல்லல்' என்னும் முறையில் அமைந்தது சின்னூல். இன்று போற்றிக் கற்பார் குன்றியுள்ள இச் சின்னூல் மீண்டும் மக்களிடை பரவுதல் வேண்டும்.

இலக்கண எண்ணங்கள், இலக்கண நுட்பங்கள் காலந்தோறும் எவ்வாறு வளர்ந்து செழித்துள்ளன என்றும், இலக்கண ஆராய்ச்சியின் வளமை எவ்வாறு ஓங்கியுள்ளதென்றும் உணர இத்தகு நூல்கள் உதவும். O

விற்பனைக்கு அணியம்!

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் அரிய நூல்கள் மறுபதிப்பு அச்சாகி முடிந்து விற்பனைக்கு அணியமாக இருக்கின்றன. அஞ்சலில் பெற அன்பர்கள் எழுதிக் கேட்க !

1.	கொய்யாக்கனி (பாவியம்)	—	9-50
2.	தன்னுணர்வு (அரிய கட்டுரை)	—	1-50
3.	ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள்.	—	2-25
4.	உலகியல் நூறு	—	6-50

பிறவெளியீடு :

இந்திச்சிக்கலும் இறுதித்தீர்வும்(மலிவுப்பதிப்பு)— 1-00
(இ. ச. ஆனந்தன்.) (சிறப்புப் பதிப்பு)— 1-50

பிற விளக்கங்கட்கு : அமைச்சர் — 'தென்மொழி' — சென்னை-5.

எண்ணில் சிலரே! ஏந்தலே வாழி!
சுங்குவார் சத்திரம் எனும் சிற்றூரில்
தங்களைக் கண்டதில் தனிப் பெரும்மகிழ்ச்சி!
'சங்க' இலக்கியத் தனித்தமிழ் நடையில்
பொங்கி எழும்பல புதுப்புதுச் செய்யுளை
அங்கண்மா ஞாலம் அறிந்தே பயனுற
தங்கா தெழுதும் தகைமை சால் பெரியோய்
இன்னே நின்னைச் சென்னைமா நகரில்
பொன்பெறு வறியவன் போலவே காண்பேன்!

— இந்தப் படிக்கு, **இராமச்சந்திரன்**, சென்னை-80.

0: 952: ஐயா, தமிழீழ விடுதலைப்போர் எனும் புனிதப்பணிக்கு தாங்கள் ஆற்றிவரும் அளப்பரிய தொண்டுகட்கு முதற்கண் எமது மனமகனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். தமிழீழ விடுதலையை வென்றெடுப்பதற்காகப் பிரான்சில் இயங்கிவரும் எமது பிரான்சு தமிழர் இயக்கமும் சில பணிகளைப் புரிந்து வருகிறது. அவ்வகையில் இயககம் வெளியிடும் இதழான 'தமிழ் முரசு' தன்னுலான பங்களிப்பை விடுதலைப் போராட்டத்திற்கு அளித்து வருகிறது. விரைவில் மலரும் தமிழீழம். —**உமாகாந்தன்**, பாரீசு.

0: 963: மதிப்பிற்குரிய ஆசிரியர் ஐயா அவர்களுக்கு. வணக்கங்கள் பல. 'இந்தி எனும் கோட்டையை இடித்துச் சுக்கு நூறுக்குக'! என்று தன் அரிமாக்குரல் எழுப்பிய ஆசிரியரின் இதழ் கிடைத்தது. இந்தத் தன்னலமற்ற அவரின் பணி மேலும் சிறக்கட்டும்! இளையவளாய்ப் பிறந்துவிட்ட காரணத்தால் வாழ்த்த முடியவில்லை. எனவே பலகோடி நன்றிகளைத் தங்கட்கு உரித்தாக்குகின்றேன். — **எம். சானகி**, உதகமண்டிலம்.

0: 964: அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய ஐயா, வணக்கம். அறிமுகம் புதிது எனினும் தொடர்பற்ற சூழ்நிலையால் தாங்கள் தமிழுக்காற்றும் தொண்டை எண்ணி நெஞ்சாரப் புகழ்ந்து கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கானவர்களில் நானும் ஒருவன். ஆழிசூழ் உலகமெலாம் ஆண்ட நற்றமிழ் ஆரிய பார்ப்பனரின் அளவிறந்த ஆட்டத்தால்....தேய்ந்து—மழுங்கி திசை தெரியாமற் போகுங்கால்-தூங்கும் தமிழினத்திற்குத் தெம்பூட்டி—தன்மானம் சுட்டிக்காட்டித் தலைநிமிர்ந்து—தனை உணர்ந்து தமிழ்வாழத் தான் வாழ வேண்டும் என்ற எண்ணத்தைப் படிப்படியாக உணர்த்தி வரும் தங்கள் பெருந்தொண்டு போற்றற்குரியது. கடந்த ஐந்தாண்டுகள் தென்மொழி—இதழுடன் எனக்குத் தொடர்பு உண்டே தவிர தங்களுடன் அறிமுகம் இல்லாததைக் குறையாகக் கருதுகிறேன். தங்களது சீரிய நற்பணிகட்கு என்றும் எனது சார்புள்ளவர்கள் தங்கட்குப் பக்கவலிவாக இருப்போம் என்று கூறிக் கொள்கிறோம்.

— **இராமதாசு**, செட்டிநாடு.

0: 965: பாவலரேறு, அன்பின் இனிய ஐயா அவர்களுக்கு வணக்கம் பல! தென்மொழியில் வெளியான 'இந்திச் சிக்கலும் இறுதித் தீர்வும் என்ற கட்டுரையில் நிறைகள் பல இருப்பினும் குறை யொன்றே நெஞ்சை வருத்துவதால அதை அங்குச் சுட்ட விரும்புகிறேன்.

கட்டுரையாசிரியர் தொடக்கக் கல்வி மட்டத்திலிருந்து ஆங்கிலத்தையும் பயிற்றுவித்துச் செம்மையான ஆங்கில அறிவையும்,

பயிற்சியையும் பெற ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கூறியிருப்பது, எவ்வகையிலும் பொருந்தியதாகாது.

தமிழகத்தைப் பொறுத்தவரை 'ஆங்கிலச் சிக்கலும் இறுதித் தீர்வும்' என்ற கட்டுரை தேவைப்படுகிற போது-தொடக்கக் கல்வியிலிருந்து சொல்லப்படுகிற ஆங்கிலம் அகற்றப் படவேண்டும் என்பதும் தீர்வில் ஒன்றாகயிருக்க - ஆங்கிலம் தொடக்கக் கல்வியிலிருந்து செம்மையாக, சீர்மையாக...என்பதெல்லாம் தேவையேயில்லாதது.

தேவையுள்ளவர்கள் —ஆசிரியர் குறிப்பிட்ட ஆறு துறைகளில் பணியாற்றுகிறவர்களும், வேலை வாய்ப்பிற்காக வேறு நாடு செல்பவர்களும் வேண்டுமானால் ஆங்கிலத்தைப் பட்டத் தேர்வாகவோ, (Degree Exam.) பட்டயத் தேர்வாகவோ, (Diploma Exam.) எழுத வாய்ப்பளிக்கலாம்.

ஆங்கில இலக்கிய இளவல் (Bachelor of English Litt.) பட்டத்தேர்வுப் பாடத்திட்டங்களை ஆங்கிலத்தை அகரத்திலிருந்து கற்றுத் தருவதற்கேற்ப அமைத்துக் கொள்ளலாம்.

நிற்க, ஆங்கிலம் முழுமையாக வரவேண்டும் என்பதற்காகவே-திராவிடப் பரம்பரைகளின் தலைவர்களின் செயல்களைப் பல தாளிகைகள் பட்டியல் இட்டு காட்டியிருந்ததை தாங்களும் குறிப்பிட்டிருந்தீர்களே இந்தி ஒழிக என்று கூக்குரலிடுவோர் பலரிருக்க யான் கூறுவது ஏற்புடையதன்றாய் யிருக்கலாம். ஆனால் தாங்கள் ஏற்பீர் என்றே என்னுளம் திறந்தேன். வணக்கம், வெல்க தமிழ்!

— **பைந்தமிழ்ப்பித்தன்**, மேட்டூர் -2

0: 966: பேரன்புமிகு ஐயா, அவர்கட்குப்பைந்தமிழ் வணக்கம். உலகத் தமிழின முன்னேற்றத்திற்கு அல்லும், பகலும் அயராமல் பாடாற்றும் தங்களின் உழைப்பின் மேன்மையைப் புலவர் தமிழ் வேந்தன் எழில் அவர்களின் வாயிலாக முழுமையாக அறிந்து கொண்டேன். ஆரவார அரசியல் போக்குகளுக்கிடையிலும், சாதி மத பேதங்களில் வேறுபாட்டாலும் நம் தமிழ்இனம் பாழ்பட்டுப் போவதைத் தடுத்து நிறுத்தத்தகுதிவாய்ந்த வழியில் தமிழர்களுக்கு உருவாக்கித் தருவதற்குத் தாங்கள் அமைத்துள்ள உ.த.மு.க. இக்கால கட்டத்திற்கு மிகவும் தேவையான ஒன்று ஆகும்.

எனவே, தாங்கள் பட்டறிவால் கண்டுள்ள கழகத்தில் சேர்ந்து மொழி உயர்விற்கும், இன உணர்விற்கும், நாட்டுணர்விற்கும் பாடுபட நான் அணியமாக உள்ளேன். தாங்கள் இடும் கட்டளையை ஏற்று நடக்கும் உ.த.மு.க. உழைப்பாளர்களுள் என்னையும் ஒருவராக இணைத்துக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.

— **இரா. சிவ இறை**, கருவேப்பிலங் குறிச்சி.

0: 967: தென்மொழி சுவடி 19 ஓலை 11-இல் பக். 29-இல் 'திருக்குறளில் ஆகமம்' என்ற 'கட்டுரை' கண்டு வியப்படைந்தேன். நல்குரவதிகாரத் தொல் வரவும் தோலும் கட்டுரையாளரின் கருத்தில் ஆகமமானது வியப்பே! **சிந்தனைக்கட்டுரை**மட்டும் அதுவும் தணிக்கையுடன் வெளியிடுங்கள்.

—**கு. பச்சைமால்**, நாகர்கோயில்.

தென்மொழி மின் அச்சகப், சென்னை- 600005 (தமிழகம்).